janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 87 | 2024 ஏப்ரல் 07 - ஏப்ரல் 13 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 01




## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீடு

# நாடாளுமன்றத் தேர்தல் சர்வாதிகாரத்துக்கு எதிரான போர்!

## மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பிரகடனம்

**நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தல் சர்வாதிகாரத்திற்கு எதிரான யுத்தம். அரசமைப்பு சட்டத்தையும், ஜனநாயகத்தையும் காக்கும் இந்தப் போரில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்தார்.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை 2024 வெளியீட்டு விழா, 31.03.2024 அன்று சென்னையில் உள்ள கட்சியின் மாநில அலுவலகத்தில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில், கட்சியின் மூத்த தலைவர் தகைசால் தமிழர் இரா.நல்லகண்ணு தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.எச்.வெங்கடாசலம் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், "இந்த நாடாளுமன்றத் தேர்தலை வழக்கமான தேர்தல்களில் ஒன்றாக கருத முடியாது. இந்தத் தேர்தலை சர்வாதிகாரத்துக்கு எதிரான யுத்தமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. அரசியல் அமைப்பு சட்டத்தை, மதச்சார்பின்மையை பாதுகாப்பதற்கான இந்தப் போரில், இந்தியா கூட்டணி வெற்றி பெறும். தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் திமுக தலைமையிலான கூட்டணி மகத்தான வெற்றி பெறும். வெற்றி பெற்ற பிறகு நாடாளுமன்றத்தில் எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் ஆர்எஸ்எஸ் அமைப்பால் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட நரேந்திர மோடி, கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் 10 ஆண்டுகளாக நிறைவேற்றவில்லை.

ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். இதன்படி 20 கோடிப் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக கோடிக்கணக்கானோர் வேலை இழந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் மீட்கப்பட்டு ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் தலா ரூ. 15 லட்சம் வரவு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்




## தேர்தல் அறிக்கையிலிருந்து...




இந்திய நாடாளுமன்றத்திற்கான, 18–ஆவது மக்களவை பொதுத் தேர்தல், இதற்கு முன் நடந்த தேர்தல்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. சுமார் 94.5 கோடி வாக்காளர்களை கொண்ட மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு யார் ஆட்சி செய்யப் போகிறார்கள் என்பதே இதற்கு முன்னர் கேள்வியாக இருந்தது. ஆனால், இந்தத் தேர்தலில் நாம் எதனை தேர்வு செய்யப் போகிறோம்? அது சர்வாதிகாரமா அல்லது ஜனநாயகமா என்பது தான் மக்கள் முன்பு உள்ள கேள்வியாகும்.

பாஜக அரசு பெரும் தோல்விகளை சந்தித்து கொண்டிருக்கும் இந்த பின்னணியில் 18–வது மக்களவைக்கான பொது தேர்தல் நடைபெறுகிறது. நாட்டில் பல்வேறு முக்கியமான பிரச்சனைகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபாட்டை மக்கள் முன்பு வைக்கிறோம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கை சாசனத்தின் அடிப்படையில், நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்களுக்கான போராட்டத்தை நடத்தும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதி கூறுகிறது.

- விவசாயிகளின் டெல்லி முற்றுகையின்போது மோடி அரசு உறுதியளித்து, நிறைவேற்ற தவறிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுதல் மற்றும் எம்.எஸ்.சாமிநாதன் குழு பரிந்துரைகளை முழுமையாக அமலாக்குதல்
- அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் இலாப விலை வழங்க வழங்கப்படுவதை சட்டபூர்வமாக உறுதி செய்தல், விளைச்சலுக்காக உற்பத்தி செலவைவிட குறைந்தபட்சம் 50 சதவீதம் கூடுதல் விலை நிர்ணயம் செய்தல், விரிவான பரவலான கொள்முதலை மேற்கொள்ளுதல்
- விரிவடைந்த முழுமையான விவசாய கடன் தள்ளுபடி, தேசிய கடன் நிவாரண ஆணையம் உருவாக்குதல், பேரிடர் நேரங்களில் துயருற்றவர்களுக்கு காலம் தாழ்த்தாது முழுத் திறனுடன் நிவாரண பணிகளை செய்தல்
- மோடி அரசின் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்பை ரத்து செய்தல்.
- குறைந்த பட்ச ஊதியத்தை மாதம் ரூ. 26,000 என உயர்த்துதல்.
- அனைத்து தொழிலாளர்களுக்கும் ரூ. 9000 க்கு குறையாமல் ஓய்வூதியம் வழங்குதல்
- கட்டுமான, உடல் உழைப்பு வாரிய பதிவுகளை எளிதாக்குதல், நிதிப் பலன்களை உயர்த்துதல்.
- அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி, வேலை செய்யும் உரிமையை அடிப்படை உரிமையாக்குதல்
- அனைவருக்குமான, பகத்சிங் தேசிய வேலை உறுதிச் சட்டம் (ஙிழிணிநிகி) இயற்றுதல்.
- பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கான நிறுவனங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து பலப்படுத்துதல், பெண்களுக்கு ஆதரவான சட்டங்கள் சரியாக அமல்படுத்துதல், கண்காணித்தல்.
- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த எல்லா வழக்குகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவுக்கு வரும் வகையில் நீதிமன்றங்கள், விரைவு நீதி மன்றங்களின் எண்ணிக்கையை அதிகமாக்குதல்.
- ஆணவக் கொலைகளைத் தடுக்கவும், பெண்களுக்கு எதிரான சீண்டல்களுக்கு எதிராகவும், கட்டப் பஞ்சாயத்து போன்ற

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## இந்தியா கூட்டணியின் வெற்றிச் சின்னங்கள்



கட்சிக் கடிதம்

# இந்திய ஹிட்லரை வீழ்த்திட...





போர்க்குணமிக்க தோழர்களே!

**இரண்டாம் உலகப்போருக்கு காரணமான, இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்களை கொன்று குவிக்க காரணமான, ஜெர்மனியின் ஹிட்லரை நாம் பார்த்தது இல்லை.**

அவனை நேரில் காணவில்லை என்றாலும், உலகின் வரலாறு நம் கண் முன்னே உள்ளது.

ஜெர்மனியின் ஹிட்லர் மடிந்து போனாலும், அவனது கொள்கைகளை பின்பற்றும் வாரிசுகள் உலகில் இன்னும் வலம் வந்து கொண்டு தான் இருக்கின்றார்கள்.

பாசிச கொள்கையை கொண்ட ஹிட்லர் தன்னை எதிர்ப்பவர், விமர்சிப்பவர் எவரும் இம்மண்ணில் உயிருடன் இருக்க அனுமதித்தது இல்லை.

தன்னைத் தவிர, தனது கட்சியை தவிர பிற எக்கட்சியும் இருக்கக்கூடாது என்று விரும்பினான்; செயல்பட்டான்; முடிவில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு மடிந்தான்.

இன்று நம் நாட்டில் ஒரு ஹிட்லரை உருவாக்கி அழகு பார்க்கிறது ஆர்எஸ்எஸ் கும்பல்.

ஜனநாயக ஏணியின் மூலம் தனக்கு கிடைத்திட்ட ஆட்சி அதிகாரத்தை தனதாக்கிக் கொண்டு, நாட்டில் வாழும் 140 கோடி மக்களுக்கு எதிரான ஒரு பெரும் யுத்தத்தை மேற்கொண்டு இருக்கின்றார் நரேந்திர மோடி.

தன்னை உயர்ந்த பதவிக்கு ஏற்றி வைத்த ஜனநாயகம் என்கிற ஏணியை எட்டி உதைத்தெறிந்து விட்டு , சர்வாதிகாரம் எனும் காட்டாட்சியை நிலைநிறுத்த முயற்சிக்கிறார்.

1947 வரை அந்நியர் ஆட்சிக்கு எதிரான 200 ஆண்டுகால போராட்டம் . அந்த மகத்தான போரில் நம் முன்னோர்கள் செய்திட்ட தியாகம் வீண் போகவில்லை.

வெள்ளையர்களின் கொடுங்கோல் ஆட்சியில் பட்ட துன்பங்கள், துயரங்கள் எழுதி மாளாது.

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் விடுதலைப் போராட்ட வீரர்கள் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள்.

உலகில் எங்கும் வழங்கப்படாத செக்கு இழுக்கும் தண்டனை, நம் வ.உ. சிதம்பரனருக்கு வழங்கப்பட்டது.

ஜாலியன் வாலாபாக் படுகொலைகள், தடியடிகள், துப்பாக்கிச் சூடுகள், தூக்கு கயிறுகள் என நம் முன்னோர் செய்திட்ட தியாகங்கள். உயிர்பலிகள் பல கொடுத்து நாடு விடுதலை பெற்றது.



அந்நியர் ஆட்சி அகற்றப்பட்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கினோம்.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை பெற்றோம்.

இம்என்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்ற நிலையை போக்கி கருத்துச் சுதந்திரம் பெற்றோம்.

நம்மை நாமே ஆண்டு கொள்ள நமக்கான அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிக் கொண்டோம்.

அரசியலமைப்பு சட்டம் பல்வேறு அமைப்புகளை நமக்கு உருவாக்கித் தந்துள்ளது.

பல மதங்கள், பல சாதிகள், பல மொழிகள் கொண்ட நாட்டில். வேற்றுமையில் ஒற்றுமை கண்ட மகத்தான தேசம், நம் தேசம்.

நாடு விடுதலை பெற்ற போது இந்து நாடாக அறிவிக்க வேண்டும் என மத வெறியர்கள் கூச்சலிடாமல் இல்லை.

ஆனால் நம் தேசத் தலைவர்கள், ஒருபோதும் அத்தகைய விஷக் கருத்துக்களுக்கு இணங்கவில்லை. நிர்ப்பந்தங்களை துணிச்சலாக எதிர்கொண்டு நிராகரித்தார்கள்.

மதச்சார்பின்மையே நமது கொள்கை என கம்பீரமாக பிரகடனம் செய்தார்கள். அத்தகைய பிரகடனத்திற்கு கிடைத்த பெரும் பரிசு என்ன தெரியுமா?

நாட்டின் விடுதலைப் போரில் தலைமை வகித்து, விடுதலைக்கு பெரும் பங்களிப்பை வழங்கிட்ட தேசப் பிதா என போற்றப்பட்ட மகாத்மா காந்தி எந்த பொறுப்பையும் வகிக்கவில்லை.

அவர் விரும்பி இருந்தால் குடியரசுத் தலைவராகி இருப்பார், அவர் விரும்பி இருந்தால் பிரதமராகி இருப்பார் . ஆனால் அவரது ஆட்காட்டி விரல் பிறரை நோக்கி நீண்டதே தவிர, தன்னை நோக்கி நீளவில்லை.

அப்படிப்பட்ட மாமனிதர் நூறாண்டுகள் வாழ்ந்து அடித்தட்டு மக்களுக்கு சேவை செய்ய ராமபிரானை பிரார்த்தித்தார்.

ஆனால் அவரது ஆசை நிராசை ஆனது. நூறாண்டு அல்ல, நாடு விடுதலை பெற்ற ஐந்து மாதம், 15 நாளில் ஆர். எஸ். எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வகுத்த திட்டத்தால், கொடியவன் கோட்சேவால் கொடூரமாக கொல்லப்பட்டார்.

ஆனாலும் ராமா, ராமா என்று கூறிக்கொண்டே அவரது உயிர் பிரிந்தது.

மதச்சார்பின்மை கொள்கைக்கு விலை மதிக்க வொண்ணா, உத்தம தலைவரை நாடு பலி கொடுத்தது.

விடுதலை போர்க்களத்தில் கிஞ்சிற்றும் பங்கேற்காத, பங்கேற்காதது மட்டுமல்ல, அன்றைய ஆட்சிக்கு வெண்சாமரம் வீசிய, காட்டிக் கொடுத்த துரோக கும்பலின் கூட்டம் தான் இன்று ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு ஆளவட்டம் போடுகிறது.

வெயிலில் நின்றால் தான் நிழலின் அருமை தெரியும் என கூறுவார்கள்.

விடுதலைப் போரில், தியாகப் போரில் எவ்வித பங்களிப்பையும் செய்ய மறுத்திட்ட இயக்கம், இன்று அதிகாரத்தில் அமர்ந்து விட்ட காரணத்தினால், ஜனநாயகம் என்கிற உலகின் உயரிய கொள்கைக்கு புறம்பாக, சர்வாதிகாரம் என்கிற கொடுவாளை உயர்த்தியுள்ளது.

தான் ஆட்சிக் கட்டில் ஏறிய 2014 முதல் இன்று வரை கடந்த பத்தாண்டு காலத்தில் நாட்டு மக்களுக்கு அளித்திட்ட வாக்குறுதிகள் ஒன்றைக் கூட நிறைவேற்றாத மோடி அரசு. சிறிதும் வெட்கம் இன்றி, மூன்றாம் முறையாக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திட வாக்கு கேட்டு வஞ்சக வலை விரித்து வருகின்றார் மோடி.

வாக்குறுதிகளை நிறைவேற்றாதது மட்டுமல்ல, வாக்குறுதிகளுக்கு மாறாக, விவசாயிகளுக்கு எதிராக, தொழிலாளர்களுக்கு எதிராக சட்டங்களை நிறைவேற்றிய வஞ்சகர் தான் மோடி என்பது மட்டுமல்ல, நாட்டின் அடிப்படையான கொள்கைகளுக்கு எதிராக செயல்பட்டு வரும் எதேச்சதிகாரம் கொண்டவராக செயல்பட்டு வருகின்றார்.

தனக்கு கிடைத்திட்ட அதிகாரத்தை தவறாக

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## வருமானவரித்துறை மூலம் அச்சுறுத்தல்

- காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டு செயல்பட முடியாமல் தடுக்கப்படுகின்றது. அரசியல் கட்சிகள் வருமான வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றாலும், வருமான கணக்கிற்கு உட்படுத்தி, வருமானவரித்துறை மூலமாக அச்சுறுத்தப்படுகின்றன.
- கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும், தான் கொடுத்து வரும் குறைந்தபட்ச நிதி மூலமாக, பொதுமக்கள் அளித்திடும் நிதி உதவி மூலமாக இயங்கிக் கொண்டிருக்கிற இயக்கம். தகரம் கண்டுபிடிக்கப்பட்ட நாளில் உண்டியலை கண்டுபிடித்தவர்கள். உண்டியல் குலுக்கும் கட்சி என்று, பிறரால் ஏளனமாக பேசப்படும் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு, ரூபாய் 11 கோடி அபராதம் விதித்து அச்சுறுத்த முயல்கிறது மோடியின் வருமானவரித்துறை.
- அதேபோன்று, 15 கோடி அபராதம் கட்ட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அச்சுறுத்தப்படுகின்றது .

**◆ ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டு மக்கள் வரியாக ஒரு ரூபாய் கொடுத்தால், 29 பைசாவை மட்டும் திருப்பித் தரும் நரேந்திர மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**

# நாகை வேதாரண்யத்தில் வேட்பாளர் அறிமுக கூட்டம்

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்பு



வேதாரண்யம்



திருத்துறைப்பூண்டி



திருவாரூர்

நாகை நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட வேதாரண்யம் தொகுதி செயல் வீரர்கள் கூட்டத்திற்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி வருகை

வேதாரண்யத்தில் நடைபெற்ற திமுக கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அறிமுகம் செய்துக்கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வராசு.

வேதாரண்யத்தில் நடைபெற்ற திமுக கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்றோர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி உள்ளிட்ட தலைவர்கள்.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் மக்களவைத் தேர்தலையொட்டி திமுக கூட்டணியின் செயல் வீரர்கள் கூட்டம் மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று,நாகை தொகுதியில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வை.செல்வராஜை அறிமுகம் செய்து வைத்து பேசினர்.

மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு,காங்கிரஸ் முன்னாள் எம்.பி, பி.வி.ராசேந்திரன்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயற்குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி, முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன்,சட்டப் பேரவை உறுப்பினர்கள் நாகை மாலி (கீழ்வேளூர்), கே.மாரிமுத்து (திருத்துறைப்பூண்டி),முன்னாள் உறுப்பினர்கள் எஸ்.கே.வேதரத்தினம், பி.பத்மாவதி,தொகுதி பொறுப்பாளர் ஜெக. வீரபாண்டியன், நகர் மன்றத் தலைவர் மா.மீ.புகழேந்தி,கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் பூண்டி. கலைவாணன், சிவகுரு.பாண்டியன், சு.மா.செல்வராசு, முருகையன், சத்தியகலா செந்தில், பொறுப்பாளர்கள் எல்.எஸ்.இ.பழனியப்பன், சதாசிவம், முருகையன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

**திருத்துறைப்பூண்டி:** நாகை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருத்துறைப்பூண்டி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் கூட்டணி தோழர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## கடனை வாரிக்குவித்த கடன்கார அரசு

கடந்த 67 ஆண்டுகள் ஆட்சி புரிந்த கட்சிகள் வாங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு கடன்கள் 57லட்சம் கோடி. ஆனால் பத்து ஆண்டுகளில் பாஜக அரசு வாங்கிய கடன் மட்டும் 100 லட்சம் கோடி.

இந்தியாவில் பிறக்கும் குழந்தைகள் 1லட்சம் கடனுடன்தான் பிறக்கிறது. சரி நூறு லட்சம் கோடி கடன் வாங்கி ஏழை, எளிய, நடுத்தர, சிறு முதலாளிகளுக்கு அவர்களின் நலன்களுக்கு செலவிட்டார்களா? இல்லை.

SEZ கார்ப்பரேட்களுக்கு 100% வரிரத்து ஒவ்வொராண்டும் 1 லட்சம் கோடி ரூபாய் வரிஇழப்பு வராக்கடன் தள்ளுபடி 45 லட்சம் கோடி ரூபாய். மோடியின் ஆட்சி கார்ப்பரேட் நலன்களுக்கே.



# ஊழல் புதை சேற்றில் மூழ்கும் மோடியின் ஆட்சி!

## திருப்பூரில் கே. சுப்பராயன் எம்.பி. பேச்சு



திமுக தலைமையிலான இந்தியா கூட்டணியின் திருப்பூர் மக்களவைத் தொகுதி வேட்பாளர் கே. சுப்பராயன் திருப்பூர் செட்டிபாளையம் பகுதியில் தனது பிரச்சாரத்தை தொடங்கினார். அங்கிருந்து இந்திரா நகர், நெசவாளர் காலனி, ஏவிபி லேஅவுட், பெரியார் காலனி, அனுப்பர்பாளையம் புதூர், அனுப்பர்பாளையம், ஆத்துப்பாளையம், சத்யா நகர், தண்ணீர் பந்தல் காலனி, திலகர் நகர், புது காலனி, வேலம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசும் போது, "ஊழல் புதை சேற்றில் மூழ்கி போன ஆட்சி தான் மோடியின் தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி.

இந்திய சர்க்காரின் கணக்குகளை தணிக்கை செய்யும் குழு இருக்கிறது. அதற்கு சி.ஏ.ஜி. என்று பெயர். அந்த குழு தான் ஒன்றிய தணிக்கை குழு. அந்த குழு மோடி சர்க்காரின் பணம் எவ்வாறு செலவழிக்கப்பட்டது என்பதை, ஆய்ந்து பார்த்தபோது, ஒதுக்கிய பணத்தில் ஏழரை லட்சம் கோடி முறைகேடு நடந்திருக்கிறது என்பதை கண்டறிந்து தெரிவித்திருக்கிறது. அதில் ஒரு விஷயம் பாருங்கள் ஒரு கிலோ மீட்டர் ரோடு போட 250 கோடி செலவிடப்பட்டு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன கொள்ளை? இது மிகப்பெரிய கொள்ளை. மிகப்பெரிய கேவலம். ஆயுஸ் மான் பாரத் திட்டம் என்ற ஒரு திட்டம் உள்ளது. அதில் சிகிச்சை அளித்தால் அந்த பணத்தை பெற்றுக் கொள்ளலாம். அதில் பாஜகவினர் செத்துப்போனவர்களுக்கெல்லாம் சிகிச்சை அளித்ததாக நூற்றுக்கணக்கானவர்களின் பெயர்களில் பணம் பெற்று இருக்கிறார்கள்.

இது போன்ற பல முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அந்த சி.ஏ.ஜி. ரிப்போர்ட்டை இவர்கள் திறக்கவே இல்லை. மூடி வைத்து விட்டார்கள்.

அடுத்து இந்தியா கூட்டணி தான் ஆட்சிக்கு வரும், ஆட்சிக்கு வந்தவுடன் இவர்களுடைய முறைகேடுகள், சட்டவிரோத செயல்கள், தேச விரோத நடவடிக்கை உட்பட சகலமும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும். உரிய தண்டனைக்காக அவர்கள் காத்திருக்கத்தான் வேண்டும்," என்று அவர் பேசினார்.

இந்த பயணத்தின் போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநகர மேயர் நா. தினேஷ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காமராஜ், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி வேலுச்சாமி, பெரியார் திராவிடர் கழகம் சண். முத்துக்குமார், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினர் பி.ஆர். நடராஜன், மாமன்ற உறுப்பினர் எஸ். செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

◆ வாயால் நிறைய வடைகளை சுட்டாச்சு!
◆ கார்ப்பரேட்டுகளிடம் வாங்கிப் பையை நிரப்பியாச்சு!
◆ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 01

# இப்போதும் நடுங்குகிற எடப்பாடி!

ஜெயலலிதா மறைவுக்குப் பின், தனது ஆட்சியையும், தலைவர்கள் முறைகேடாகச் சேர்த்த பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களையும் பாதுகாக்க பாஜகவிடம் சரணடைந்தது அஇஅதிமுக.

தமிழ்நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்த கட்சி என்ற பெருமிதத்தையும், கண்ணியத்தையும் இழந்து அடிமையானது. "மோடி எங்கள் டாடி" என்று கொண்டாடினார்கள்.

"லேடியா, மோடியா" என்ற அம்மையாரின் முழக்கத்தை மறந்தார்கள். மாநில மின்சார வாரியத்தின் சுயேச்சைத் தன்மையை பாழ்படுத்தி, மின் கட்டணத்தை உயர்த்த வைக்கும் உதய் திட்டம்; மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்தை சீர்குலைக்கும் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்; மாநிலங்களுக்கு வருவாயே கிடைக்க விடாமல், மொத்தமாக வரியை வாரிச் சுருட்டுகிற ஜிஎஸ்டி சட்டம்; தமிழ்நாட்டின் மருத்துவ கல்லூரிகளில் தமிழர்கள் படிக்கும் வாய்ப்பைக் குறைப்பதற்கான பொது நுழைவுத் தேர்வு திட்டம் ஆகியவற்றை ஜெயலலிதா உறுதியோடு எதிர்த்தார்.

ஆனால் அத்தனையையும் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொண்டு மண்டியிட்டது எடப்பாடி அரசு.

மாநில அரசுக்கு போட்டியாக, அன்றைய மாநில ஆளுநர் புரோகித் மாவட்டங்களுக்குச் சென்று பரிசீலனை கூட்டங்கள் நடத்தினார். குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு தலைமைச் செயலகத்திலேயே அதிகாரிகள் கூட்டத்தை நடத்தினார்.

மாநில உரிமையை சீர்குலைக்கிற, கூட்டாட்சி முறையை அழிக்கிற இந்தப் படுபாதகச் செயல்களை எதிர்த்து எடப்பாடி ஒரு வார்த்தை பேசவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக மதரீதியாக நாட்டைப் பிளவு படுத்த, குறிப்பாக முஸ்லிம்களைத் துன்புறுத்த, குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மோடி அரசு கொண்டு வந்தது. அதிமுக அதை எதிர்த்து இருந்தால் மாநிலங்களவையில் அந்தச் சட்டம் தோற்கடிக்கப்பட்டு இருக்கும். ஆனால் வெட்கமே இல்லாமல், அதை ஆதரித்து சட்டம் நிறைவேறக் காரணமானது எடப்பாடியின் அஇஅதிமுக.

எஸ்டிபிஜ மாநாட்டுக்கு போய் தொப்பி வைத்துக் கொண்டு பேசினால், இந்த மாபெரும் துரோகக் கறையைக் கழுவி விட முடியுமா?

இந்தக் கட்சி நமக்கு சரிப்பட்டு வராது என்று கருதிய தமிழ்நாட்டு மக்கள், மாநில ஆட்சியை மாற்றினார்கள்.

திமுக ஆட்சி வந்தவுடன் கொடுந்தொற்றான கொரோனாவை எதிர் கொண்டது. புலம்பெயர் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரத்தை நடந்தே சென்றார்கள். சிறப்பு ரயில் விடுவதற்கு மோடி அரசு மாநிலத்திடம் கட்டணம் வசூலித்தது. ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினாரா எடப்பாடி?

அவர் முதலமைச்சராக நிறைவேற்றிய சட்டங்கள் உட்பட, தமிழ்நாடு சட்டப்பேரவை இயற்றிய சட்டங்களை ஏற்க மறுத்தார் ஆளுநர் ஆர்.என். ரவி. சட்டப்பேரவைக்கு கூட்டத்தில் வாசிக்கக் கொடுத்த உரையில் இருந்த பெரியார், அண்ணா ஆகியோரின் பெயரைச் சொல்ல மறுத்தார். எங்கள் தலைவரின் பெயரை ஏன் சொல்லவில்லை என்று கேட்டாரா எடப்பாடி?

11 மாவட்டங்கள் பெருவெள்ளத்தால் தத்தளித்த போதும், அதற்கு ஒரு ரூபாய் கூட நிதி தர முடியாது என்று மோடி அரசு மறுத்ததையாவது கண்டிக்க வேண்டாமா?

இந்த கொடுஞ்செயல்கள் திமுகவுக்கு எதிரானவையா அல்லது தமிழ்நாட்டுக்கும், தமிழர்களின் உரிமைகளுக்கும் எதிரானவையா?

இப்போது "தமிழர் உரிமை மீட்போம், தமிழ்நாட்டைக் காப்போம்" என்று முழங்குகிறாரே! அதை எழுப்ப அவருக்குத் தார்மீகத் தகுதி இருக்கிறதா?

இப்போதும் மோடி அரசை பற்றி ஒற்றை வார்த்தை பேசி விடக்கூடாது என்பது தானே அவர் முழக்கத்தின் உள்நோக்கம்.

விவசாயிகள் போராட்டம், அரசுப் பணியாளர் போராட்டம், உள்ளாட்சி தொழிலாளர் போராட்டம், போக்குவரத்து தொழிலாளர் போராட்டம் ஆகியவை நடந்த போது கம்யூனிஸ்டுகள் ஏன் மௌனம் காத்தீர்கள் என்கிறார் எடப்பாடி.

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நடத்தியதும், களத்தில் நின்று போராடியதும், கைதாகி வழக்குகளை எதிர்கொண்டதும், சட்டமன்றத்தில் எழுப்பியதும் கம்யூனிஸ்டுகள்தான் என்பது அவருக்கு எப்படித் தெரியும்.

முதலமைச்சராக இருந்தபோது, தூத்துக்குடியில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதை, டெலிவிஷனைப் பார்த்துத் தான் தெரிந்து கொண்டேன் என்ற அறிவாளி அல்லவா அவர்!

அது சரி, அப்போதெல்லாம் அவரது கட்சி அறிக்கை விட்டதை தவிர, வேறு என்ன செய்தது? எந்தப் போராட்டத்திலாவது அவர்கள் வழக்குகளை சந்தித்தது உண்டா?

அவரது கட்சியிலிருந்து சென்ற முறை ஒரு எம்.பி. போனார். தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை எதிர்த்து அவர் வாய் திறந்ததுண்டா?

பாஜக, முதலில் அழிக்க நினைப்பது அஇஅதிமுகவைத்தான். தன் கட்சியை நிலை நிறுத்திக் கொள்வதற்காகவாவது பாஜகவை எதிர்த்து நான்கு வார்த்தைகள் எடப்பாடி பேசினால், நல்லது!

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும். விளைபொருட்களுக்கு கட்டும்படியான விலை நிர்ணயம் செய்யப்படும். குறிப்பாக எம்.எஸ். சாமிநாதன் குழு பரிந்துரை நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அதனையும் நிறைவேற்றவில்லை. அதற்காகப் போராடிய விவசாயிகள் மீது அண்டை நாட்டின் மீது போர் தொடுப்பது போன்று போர் நடத்தி அடக்குமுறையை ஏவி விட்டார்.

நூறு ஆண்டுகளாக தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகள், சலுகைகள் அனைத்தையும் மோடி அரசு முற்றிலும் பறித்து விட்டது.

மக்களின் நலனுக்காக தேச உடமையாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து, பல்லாயிரம் கோடிகளை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கடன் கொடுக்க வைத்த மோடி அரசு, அவற்றை வாரா கடனாக்கி தள்ளுபடி செய்கிறது. ஆனால் மாணவர்கள் பெற்ற கல்வி கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து விட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் சாதாரண மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. ஆனால் அவர்கள் மீது வரி மேல் வரி போடப்படுகிறது. குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்கள், பென்சில், ரப்பர் மீது கூட வரி போடப்படுகிறது. சாதாரண மக்கள் பயன்படுத்தும் அலுமினிய பொருட்கள் மீதும் வரி, துடைப்பத்தின் மீதும் வரி என வரிக் கொள்ளையே நடந்து வருகிறது. ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 5 விழுக்காடு வரிச் சலுகை வழங்கப்படுகிறது.

அரசமைப்பு சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட அமலாக்கத் துறை, வருமானவரித்துறை போன்றவற்றைப் பயன்படுத்தி மோடி அரசால் எதிர்க்கட்சிகள் ஒடுக்கப்படுகிறது.

பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளுக்கு உடனுக்குடன் சின்னம் ஒதுக்கிய தேர்தல் ஆணையம், எதிர்க்கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்காமல் காலதாமதம் செய்தது. சில கட்சிகளுக்கு ஒதுக்க மறுத்துவிட்டது. தேர்தல் ஆணையம் நடுநிலையான தேர்தலை நடத்தும் என்ற நம்பிக்கை இல்லை.

10 ஆண்டுகளாக கொடுத்த வாக்குறுதி எதனையும் நிறைவேற்றாத மோடி அரசாங்கம், மதத்தைப் பயன்படுத்தி, மத ரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி வாக்குகளை பெற முயலுகின்றது. கடவுளைப் பயன்படுத்தி வாக்குகளை பெற முயல்கின்றது. இதன் மூலம் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்து விட முடியும் என பாஜகவினர் கனவு காண்கின்றனர். அது நடக்காது. இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும்" என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா முத்தரசன் தெரிவித்தார்.

இந்த அறிக்கை வெளியீட்டு விழாவில், மாநில துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன் மற்றும் வஹிதா நிஜாம், டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, மாவட்டச் செயலாளர்கள் எஸ்.கே.சிவா, பா.கருணாநிதி, வெங்கடேஷ் வேம்புலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

சட்டவிரோத அமைப்புகளுக்கு எதிராகவும் சட்டங்களைக் கடுமையாக்குதல்.

- பட்டியலின, பழங்குடி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு முறையான இட ஒதுக்கீடு தனியார் துறை, அரசு தனியார் கூட்டிணைப்பு (PPP model) உட்பட எல்லா பிரிவுகளிலும் உறுதி செய்தல்.
- தேசிய சிறுபான்மை ஆணையத்துக்கு அரசியலமைப்புச் சட்டத் தகுதி வழங்கப்படும்.
- அனைவருக்கும் ஆரம்பக்கல்வி முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்குதல், அதை கல்வி உரிமை சட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.
- ஒட்டு மொத்த தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- நதிகளை இணைப்பது பற்றி ஒரு பொதுக்கருத்தை உருவாக்குதல்.
- காடுகள், ஆறுகள், நீர்நிலைகளைப் பாதுகாத்தல்.
- பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ள பத்திரிகைகள் மற்றும் பதிவுச் சட்டத்தின் பாதகமான அம்சங்களை நீக்குதல்
- மாநிலங்களுக்கு இடையிலான, மண்டல அளவிலான குழுக்களைத் திறம்பட செயல்படுத்துதல்.
- மத்திய அரசு மாநில அரசுகளுக்கு இடையில் அதிகாரத்தையும், வளங்களையும் உரிய பங்கீடு செய்வதற்காக திட்டக்குழுவை மீண்டும் நிறுவுதல்.

நாடு இப்போது இருக்கும் நிலையில் ஆட்சியிலிருந்து பா.ஜ.க.வை அகற்றுவது கட்டாயத் தேவையாகும். விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் இருந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சி வெகுமக்களின் போராட்டத்திற்கு அளப்பரிய தியாகங்களை புரிந்துள்ளது. வகுப்புவாதம், பாசிசம், குழுவாதம், பிரிவினைவாதம், கார்ப்பரேட் கொள்ளைகள் ஆகியவற்றுக்கு எதிராகவும், மக்கள் விரோத சக்திகளுக்கு எதிராகவும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ச்சியாகப் போராடி வந்துள்ளது.

சர்வாதிகாரம், மதவெறி, கார்ப்பரேட் ஆதரவு வலதுசாரி அரசியலை வீழ்த்த!

நாட்டைக் காக்க, அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க,

ஜனநாயகத்தையும் மதச்சார்பின்மையும் காப்பாற்ற,

பாஜக மற்றும் அதனோடு கள்ளக் கூட்டணி வைத்துள்ள அஇஅதிமுக கூட்டணி கட்சிகளையும் தோற்கடிப்பீர்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட திமுக தலைமையிலான

இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்குவாக்களிப்பீர்!

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பயன்படுத்தி, ஜனநாயக விரோத செயலில் ஈடுபட்டு வருகின்றார்.

எதிர்க்கட்சிகள் இல்லாத இந்தியாவை உருவாக்க, அதிகார அத்துமீறல்களை வரம்பின்றி தொடர்கின்றார்.

அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்ட, சுதந்திரமாக செயல்பட வேண்டிய வருமானவரித்துறை, அமலாக்கத்துறை போன்ற தனித்த அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட முடியாமல், மோடியின் எதேச்சதிகார உத்தரவுகளுக்கு அடிபணியும் ஏவல் நாய்கள் போன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தேர்தல் சின்னங்கள் ஒதுக்குவதில் தேர்தல் ஆணையம் பாராபட்சம் காட்டுகிறது. பாஜக கூட்டணியில் அங்கம்வகிக்கும்கட்சிகளுக்குகேட்ட மாத்திரத்தில், அவர்கள் விரும்பும் சின்னங்களை வாரி வழங்குகிறது. அதே நேரத்தில் பாஜகவிற்கு எதிரான அணியில் உள்ள கட்சிகளுக்கு, தேர்தல் சின்னம் வழங்குவதில் மறுப்பு மற்றும் கடைசி நேரம் வரை இழுத்தடிப்பு என்ற நிலையை தேர்தல் ஆணையம் மேற்கொள்கிறது . நாணயம் இல்லாத ஆணையமாக செயல்படுகிறது.

தேர்தல் பத்திர ஊழல் என்பது உலகிலேயே மிகப்பெரிய ஊழல் என்று கூறும் பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் வேறு யாரும் அல்ல, ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா அவர்களின் கணவராவார்.

ஊழலை ஒழிக்க புறப்பட்டதாக என்று தன்னை தம்பட்டம் அடித்துக் கொள்ளும் மோடி, ஆகப்பெரும் ஊழலை சத்தம் இல்லாமல் சாமர்த்தியமாக செய்துவிட்டு, உச்ச நீதிமன்றத்தின் முன்பு மூடி மறைக்க முடியாமல் அம்பலப்பட்டு, அம்மணமாக நிற்கிறது மோடி கும்பல்

நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தல் என்பது ஜனநாயகத்தை காப்பதற்கான பெரும் போர்.

ஹிட்லரைத் தோற்கடித்து புறமுதுகு காட்டி ஓட செய்து, உலகில் பாசிசத்தை தோற்கடித்து, உலகின் ஜனநாயகத்தைக் காப்பாற்றிய செம்படை வீரர்களின் பெயரால் சபதம் மேற்கொள்வோம்.

இந்தியாவின் ஹிட்லரான மோடி பாசிச கும்பலை தோற்கடிப்போம்!.

ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்!. நாட்டைப் பாதுகாப்போம்!.

மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்,

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# மாநில தேர்தல் பிரச்சார பேச்சாளர் பயிற்சி முகாம்

திருவரம்பூர் கைலாஷா நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில கிளர்ச்சி பிரச்சார பேச்சாளர்கள் பயிற்சி முகம் நடைபெற்றது

இம்முகம்முக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ் குமார் தலைமை வகித்தார் மாநகர் மாவட்ட செயலாளர் சிவா புறநகர் மாவட்ட நிர்வாககுழு ஜனசக்தி உசேன் பழனிச்சாமி ராதாகிருஷ்ணன் ஊராட்சி மன்ற தலைவி ரம்யா ஈஸ்வரி சுமதி பார்வதி ஆயிஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்

முகாமை துவக்கி வைத்து மாநில கிளர்ச்சி பேச்சாளர் குழு கன்வீனர் மூ. வீரபாண்டியன் உரை நிகழ்தினார். குழு உறுப்பினர் இந்திரஜித் பேச்சாளர்கள் பயிற்சிக்கு தேவையான இந்த ஒரு நாள் பயிற்சி சிறிய தெருமுனை பரப்புரைக்கு பயன்படும் வகையில் விளக்கி பேசினார்.



### வாயிலேயே வடை சுடும் மோடி ஆட்சி வளர்ச்சியா! வீழ்ச்சியா ?

* 2014ல் பாஜக சொன்ன முக்கிய வாக்குறுதிகளில் ஒன்று வெளிநாட்டில் இருக்கும் கருப்பு பணத்தை கைப்பற்றி இந்திய மக்களின் வங்கி கணக்கில் 15 லட்சம் போடுவோம் என்று சொன்னது, நடந்தது என்ன மக்கள் சிறுக வங்கியில் சேமித்து வைத்திருந்த தொகைகளையும் எடுத்துக்கொண்டனர்,

* அடுத்து ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என்று சொன்னார்கள் அப்படியானால் ஏறத்தாழ 10 ஆண்டு ஆட்சியில் இருந்த பாஜக ஆட்சியில் 20 கோடி பேர் வேலை வாய்ப்பு பெற்று இருக்க வேண்டும்,

பத்து லட்சம் பேருக்காவது உத்திரவாதமான வேலைவாய்ப்பு அளித்தார்களா? இல்லை. பக்கடா விற்று சுய வேலை தேடிக் கொள்ளவேண்டும் என்று இளைஞர்களை பார்த்து கிண்டல் செய்தவர் மோடி,

* வேளாண் விளைபொருளுக்கு உற்பத்தி செலவை விட ஒன்றை மடங்கு விலை தருவோம் என்றார்கள், ஆனால் ஆட்சிக்கு வந்தபின் விவசாயிகளுக்கு எதிராக மூன்று புதிய வேளாண் சட்டங்கள் கொண்டுவந்தனர், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிகளின் குழு பரிந்துரையை அமுல்படுத்துவோம் என்றார்கள், விளைபொருளுக்கு குறைந்த பட்ச விலை நிர்ணயம்( அதாவது உற்பத்தி செலவை விட 50 விழுக்காடு கூடுதல் விலை நிர்ணயம் ) என்றார்கள்,

இந்த கோரிக்கையை முன்வைத்து இன்று வரை விவசாயிகள் ரோட்டில் வந்து போராடி கொண்டிருக்கின்றனர், ஏற்கனவே 13 மாதங்கள் காத்திருப்பு போராட்டங்கள் நடத்தினார்கள்,



இந்த போராட்டத்தில் ஏறத்தாழ 700 விவசாயிகள் இறந்து போனார்கள், இரக்கமே இல்லாமல் லக்கிம்பூர்கேரி என்ற இடத்தில் மத்திய இனண அமைச்சர் மகன் போராடிய விவசாயிகள் மீது காரை ஏற்றி கொன்றார்.

## பாஜக நவீன ஊழல்கள்

யோக்கியர் வருகிறார் சொம்பைத்தூக்கி உள்ளே வை என்பதுப் போல்தான் இருக்கிறது பாஜக வின் நவீன ஊழல்கள்,

இந்தியாவின் தலைமை கணக்கு தணிக்கையாளர் (சி.ஏ.ஜி) அறிக்கையே பாஜக அரசின் பல ஊழலை அம்பலப்படுத்தியுள்ளது,

குறிப்பாக மத்திய நெடுஞ்சாலை துறையில் பெரும் அளவு ஊழல் நடந்துள்ளதை இந்த அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது, நெடுஞ்சாலை துறை அமைச்சராக இருக்கும் நிதின் கட்காரி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செல்லப்பிள்ளை.

பாரத்மாலா திட்டத்தின் கீழ் துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை அமைக்க 1 கி.மீ சாலை அமைக்க 18 கோஷ்வடி திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் திடீரென தற்போது 1கி.மீ சாலை அமைக்க திட்டமதிப்பு 250 கோடி யென நிர்ணயம் செய்துள்ளனர், தங்கத்தில் சாலை போடப்போகிறார்களா என ஜி.ஏ.ஜி அதிர்ச்சியில் கேள்வியெழுப்பியுள்ளது.

அதுமட்டுமல்ல காஷ்மீர் தொடங்கி கன்னியாகுமரி வரை 75 ஆயிரம் கிலோ மீட்டர் ரோடு அமைக்க போட்ட திட்டத்தில் திட்டமதிப்பீடை மாற்றியமைத்ததில் சுமார் 7.5லட்சம் கோடி ஊழல் நடந்துள்ளது,

தேர்தல் பத்திர ஊழல்

தேர்தல் பத்திரம் என்கிற நவீன லஞ்சம் பெறும் திட்டத்தை பாஜக அரசு கொண்டு வந்து 8000 கோடிக்கு மேல் பாஜக நன்கொடை நிதிதிரட்டியுள்ளது, ஒரு கம்பெனி தான் அடைந்த லாபத்தை விட 6 மடங்கு தேர்தல் பத்திரமாக வாங்கி பாஜக விற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது எப்படி? செல் கம்பெனி, கம்பெனியாக பதிவு செய்து பத்து நாட்கள் கூட ஆகாதநிலையில் கோடிக்கணக்கில் தேர்தல் பத்திரம் வாங்கி பாஜக விற்கு வழங்கியது எப்படி இது சாத்தியம் ஏதாவது மந்திரக் கோல் வைத்திருந்தார்களோ?

பல கம்பெனிகள் அமுலாக்கத்துறை ரெய்டு அடித்த மறுநாளே பாஜக விற்கு கோடிக்கணக்கில் நன்கொடை கொடுத்துள்ளனர்,

ஆயுஸ்மான் பாரத் திட்டத்தில்( மருத்துவ காப்பீடு திட்டத்தில் ) ஊழல்

இந்த திட்டத்தில் 7.5 லட்சம் பயனாளிகளுக்கு ஒரே போன் நம்பர் கொடுக்கப்பட்டுள்ளது அந்த எண் 9999999999 என்ற போலி மொபைல் எண்ணை கொண்டு பயனாளிகள் அட்டை வழங்கப்பட்டு பெரும் ஊழல் நடந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏழு ஆதார் அட்டைகளின் எண்ணை கொண்டு 4761 ஆயுஷ்மான் பாரத் அட்டை தரப்பட்டுள்ளது, இறந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக பணம் செலவு செய்யப்பட்டுள்ளது 12 லட்சம் கோடி முதல் 22 லட்சம் கோடி வரை முறைகேடுகள் நடந்துள்ளது.

சுங்கச்சாவடி கட்டணங்கள் உள்ளிட்ட மத்திய பாஜக அரசால் கொண்டுவரப்பட்ட ஏழு திட்டங்களில் கிட்டத்தட்ட 7 லட்சம் கோடிக்கு மேல் முறைகேடு நடந்திருப்பதாக சிஏஜி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பஞ்சாப், ஹரியானா எல்லைகளில் போராடும் விவசாயிகள் மீது கடுமையான அடக்குமுறையை ஏவியுள்ளனர், யுத்த காலங்களில் எதிரி நாட்டு படையினரை நிலைகுலைய செய்யும் பீரங்கி ஒலி எழுப்பியை விவசாயிகள் மீது பயன்படுத்துகின்றனர், கடைசி பட்ஜெட் வரைக்கூட விவசாயிகள் கடன் தள்ளுபடி பற்றி ஒரு வரி கூட இல்லை

இதுவெல்லாம் தேர்தல் வாக்குறுதியாக பாஜக சொன்னதுதானே என்று கேட்டால் அதுவெல்லாம் "தேர்தல் ஜுமலா" என்று வெக்கமே இல்லாமல் கூறுகின்றனர்,

### சிறு, குறுந் தொழில் முடக்கம்

▸ சிறு குறு தொழில்கள் நசுக்கப்பட்டன பாஜகவின் மோசமான கொள்கை முடிவால் இந்தியாவில் 8 கோடி மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் சிறு குறு தொழில்களை நசிவடைந்துள்ளன, தமிழ்நாட்டில் மட்டும் 44 ஆயிரம் சிறு குறு தொழில்கள் நலிவடைந்து உள்ளன

நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் சிறு குறு தொழில் துறையின் பங்களிப்பு 8 விழுக்காடாகவும், இந்தியாவின் ஏற்றுமதியில் 43 விழுக்காடாகவும் இருந்து வருகிறது, இந்நிலையில் பாஜக வின் கொள்கை முடிவுகளால் அத்தகைய தொழில்துறை நலிவடைந்து வருகிறது,

அதுமட்டுமல்ல கார்ப்பரேட் தயாரிப்புகளுக்கும், ஜி.எஸ்.டி 18 விழுக்காடு வரி, சிறு குறு தொழில் தயாரிப்புகளுக்கும் 18 விழுக்காடுஜி.எஸ்.டி வரி விதிப்பை விதித்து பலரின் வாழ்வாதாரத்தை பறித்துள்ளது பா.ஜக ஆட்சி,

### பணமதிப்பு இழப்பு

▸ பணமதிப்பிழப்பு நடவடிக்கையில் சாமானியமக்களும் நடுத்தர மக்களுமே பாதிக்கப்பட்டனர், ஏடிஎம் வாசலில் கியூவில் நின்றே பலர் உயிரை விட்டனர், புதிய 2000 நோட்டு சாமானிய நடுத்தர மக்களுக்கு கிடைக்க வில்லை ஆனால் சேகர் ரெட்டி போன்ற மணல் மாஃபியா களிடம் தாராளமாக கிடைத்தது எப்படி.

▸ ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு சிறு குறு தொழில்களை பாதித்த தோடு, உணவுப் பொருட்களுக்கும் விதிக்கப்பட்டது,

உதாரணத்திற்கு ஹோட்டலில் 50 ரூபாய்க்கு ஒரு தோசையை சாப்பிட்டுவிட்டு 55 ருபாய் கொடுக்கிறோம், இட்லிக்கும் தோசைக்குமே மோடி ஆட்சியில் வரிவிதிப்பு,

### ரஃபேல் விமான ஊழல்

பாஜக ஆட்சியில் நாட்டின் வளர்ச்சி சதவிகிதம் குறைந்துகொண்டே வந்துள்ளது,6 விழுக்காட்டிற்கும் கீழே சரிந்துள்ளது, தனிநபர் வருமானத்தில் 140 வது இடத்தில் இருக்கிறது, மோடியின் ஆட்சி அமிர்த காலம் அல்ல ஆளகால விசமான காலம், பணவீக்கம் ஏற்பட்டுள்ளதால் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது, 42 விழுக்காடு பட்டதாரிகள் வேலைவாய்ப்பில்லாமல், வெம்பி தவிக்கின்றனர், 30 விழுக்காடு குழந்தைகள் சத்துக்குறைவாக உள்ளனர், 5 விழுக்காடு பெண்கள் சோவை நோயால் பாதிப்படைந்துள்ளனர்,

### தமிழ்நாடு புறக்கணிப்பு

தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய பேரிடர் நிதிகளும் கொடுக்கவில்லை,வரி பங்கீட்டையும் வழங்காமல் திட்டமிட்டு மோடியரசு புறக்கணிக்கிறது, அதுமட்டுமல்ல,

தமிழ்நாடு மக்களிடமிருந்து ஒரு ருபாய் வரியாக பெற்றுக் கொண்டு, வெறும் 29 பைசாவை மட்டுமே திரும்ப வழங்குகிறது ஒன்றிய அரசு, ஆனால் பாஜக ஆளும் மாநிலங்கள் ஒரு ருபாய் வரி செலுத்தினால் 3 மடங்கு திரும்ப கொடுக்கிறது ஒன்றிய அரசு, இப்படி மாற்றந்தாய் மனப்போக்கோடு ஒன்றிய அரசு செயல்படுகிறது, தமிழ்நாட்டை புறக்கணிக்கும் பாஜகவை, தமிழ்நாட்டு மக்கள் முற்றிலுமாக புறக்கணிக்கவேண்டும்,

### பாஜக இந்துக்கள் கட்சியா?

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் அரசில், கம்யூனிஸ்டுகள் 61. எம்.பிக்களை பெற்றிருந்தோம், குறைந்த பட்ச திட்டத்தின் அடிப்படையில் மன்மோகன்சிங் அரசுக்கு ஆதரவளித்த கம்யூனிஸ்டுகள் கிராமப்புற வேலை உறுதிச்சட்டம் ,வன உரிமைச் சட்டம் 2006 தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் போன்ற சட்டங்கள் நிறைவேற்ற காரணமாக கம்யூனிஸ்டுகள் கடந்த காலத்தில் செயல்பட்டுள்ளோம், நாடு மிகப் பெரிய ஆபத்தில் இருக்கும் இந்த நேரத்தில் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்ட்கள் மக்களின் மனசாட்சியாக செயல்பட வேண்டியது அவசியம்.

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் சார்பில் லெனின் காந்தி தொகுத்த தேர்தல் பிரச்சாரப் பாடல்களின் தொகுப்பை, மாநிலச் செயலாளர் முத்தரசன் வெளியிட, தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் செல்வராஜ் பெற்று கொண்டார்.

**■ வார்த்தைகளை வீசியாச்சு! ■ வாக்குறுதிகளை மறந்தாச்சு!**
**■ வாக்களித்த மக்களை வாட்டி வதைச்சாச்சு! ■ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**

# கச்சத்தீவு மீது பாஜகவின் திடீர் பாசம்!
# வெறும் தேர்தல் வேசம்!



த.லெனின்

**இலங்கைக்கு கச்சத்தீவை வழங்கிய விவகாரத்தில் திமுக அரசுக்கும் முக்கியப் பங்கு உள்ளது என்று பாஜக தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.**

இச்சம்பவத்தின்போது அன்று முதல்வராக இருந்த கருணாநிதிக்கு தெரிந்தே தான் கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டுள்ளது. எனவே, காங்கிரஸ் மற்றும் திமுக, பொதுமக்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அண்ணாமலை பேசியுள்ளார்.

டெல்லியில் பெரிதும் மதிக்கத்தக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்ட விவகாரம் குறித்த விரிவான தகவல்களை செய்தியாளர்களிடம் எடுத்துக் கூறியுள்ளார். அதில் கடந்த காலத்தில் துரோகம் இக்கப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால் கடந்த 27.1.2015 அன்று அளிக்கப்பட்ட ஆர்.டி.எஸ். பதிலில் கச்சத்தீவை தாரைவார்த்தது சரிதான் என்று சொல்லிவிட்டு, இப்போது ஏன் அந்தர்பல்டி அடிக்கிறார்? இது அழகா?

நமது கேள்வி நீங்கள் தான் உண்மையான தேசபக்தர்களாயிற்றே ஏன் உங்கள் 10 ஆண்டு ஆட்சியில் கச்சத்தீவை மீட்டிருக்கக்கூடாது? யார் உங்களை தடுத்தது? ஆனால் ஏற்கனவே அருணாச்சல் பிரதேசத்தில் மலைகள் நீர்நிலைகள் உட்பட 30 க்கும் மேற்பட்ட இடங்களை தன் வசப்படுத்தி பெயரிட்டு இருக்கிறது சீனா. அதற்கு மோடி அரசு என்ன செய்தது?

டோக்லாம் ஊடுருவலில் சீனர்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் இந்திய நிலப்பரப்பை பிடித்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு வந்த போதும் அது குறித்து பேச மறுப்பது ஏன்?தேர்தலில் அம்பலப்பட்டு நிற்கும் பாஜகவிற்கு மக்களுக்காக இதை செய்தோம் அதை செய்தோம் என்று சொல்லி பேசுவதை விட இதுபோல திசை திருப்புவது தங்களுக்கு உகந்தது என்று நினைக்கிறார்கள் ஆனால் பாவம் தமிழ்நாட்டு மக்கள் அனைத்தும் அறிந்தவர்கள் என்பது தேர்தலுக்குப் பிறகுதான் புரியவரும்.

### கச்சத் தீவின் வரலாறு!

கச்சத்தீவை இலங்கை உரிமைக் கோருவது 1920களிலேயேதுவங்கிவிட்டது. கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தம் என்பதற்கு ஆதாரமாக,இந்திய அரசுடனான ஒரு கடிதப் போக்குவரத்தையும் அப்போது சுட்டிக்காட்டினார்.

இதை ஏற்காத இந்தியக் குழு, வேண்டுமானால் அந்தப் பகுதியில் மீன் பிடி உரிமையை மட்டும் தருவதாகச் சொன்னது. அதன்படி கச்சத்தீவிலிருந்து மேற்கே மூன்று மைல் வரை இலங்கைக்கு மீன் பிடிக்கும் உரிமை இருப்பதாக ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தானது. சங்கு அதிகமுள்ள பகுதி மெட்ராஸ் மாகாணத்தின் கீழ் வருவதால், மீன் பிடி உரிமையை விட்டுக்கொடுக்கலாம் என நினைத்து பேச்சு வார்த்தை நடத்திய அதிகாரிகள், இப்படிச் செய்தார்கள். ஆனால், இந்த ஒப்பந்தத்தை காலனி அரசு ஏற்கவில்லை.



### முதல் ஒப்பந்தம்

முதல் ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் தேதி கையெழுத்தானது. இதில் பாக் நீரிணைப் பகுதியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லைகள் வரையறுக்கப்பட்டன. கச்சத்தீவு இலங்கைக்குச் செல்லும் வகையில் எல்லை வரையறுக்கப்பட்டது.

இருந்தபோதும், இந்த ஒப்பந்தத்தின் 5வது ஷரத்து, இந்திய மீனவர்களும் அந்தோணியார் கோவிலுக்கு வரும் பக்தர்களும் வழக்கம்போல அந்தப் பகுதிக்குவரலாம்என்றும்இதற்கென பயண ஆவணங்கள் தேவையில்லையென்றும் கூறியது.

6வது ஷரத்தின்படி, இந்திய, இலங்கை மீனவர்கள் எல்லை கட்டுப்பாடின்றி இரு நாடுகளின் கடற்பகுதிகளிலும் சென்றுவர அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறியது. இந்த ஒப்பந்தத்தில் இந்திரா காந்தியும் சிறிமாவோ பண்டாரநாயகவும் கையெழுத்திட்டனர்.

### இரண்டாவது ஒப்பந்தம்

கச்சத்தீவு தொடர்பான இரண்டாவது ஒப்பந்தம் 1976ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் மன்னார் வளைகுடா பகுதியிலும் வங்காள விரிகுடா பகுதியிலும் எல்லைகளை வரையறுத்தது. இத்துடன் இரு நாடுகளும் தத்தம் கடற்பகுதியில் இறையாண்மை உடையவர்கள் என்று குறிப்பிட்டது.

இதன் மூலம் 1974 இல் வழங்கப்பட்டிருந்த சலுகைகள், இந்த ஒப்பந்தத்தின் மூலம் இல்லாமல் ஆக்கப்பட்டன. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் வெளியுறவுத் துறை செயலர் கேவல் சிங்கும் இலங்கையின் சார்பில் அந்நாட்டின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புச் செயலரான டபிள்யு.டி. ஜெயசிங்கேவும் கையெழுத்திட்டனர்.

### தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

இந்நிலையில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகினர். வலைகள் பறிக்கப்படுவதும் படகுகள் உடைக்கப்படுவதும் தொடர் கதை ஆயின எனவே இதனை கருத்தில் கொண்டு கட்சத் தீவை திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தியது.



## அமைப்புச் சட்டத் திருத்தம் வேண்டும்

கச்சத்தீவு ஒப்பந்தம் சட்ட ஏற்பு பெற வேண்டுமானால் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 இன்படி, அரசமைப்புச் சட்டப்பிரிவு 1இல் சட்ட திருத்தம் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசு அவ்வாறு மேற்கொள்ளவில்லை.

மேலும் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 இன் படி மாநில எல்லைகளை மாற்றம் பற்றி செய்யப்படும் சாதாரணச்சட்டம்கூட நாடாளுமன்றத்தில் இயற்றப்படவில்லை.

ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்பு சட்டம் 370 நீக்கியதை போல இந்த ஒப்பந்தத்தை தேசபக்தி உணர்வோடு மோடி அரசு நீக்கி இருக்கலாமே ஏன் நீக்கவில்லை? 1977ல் வாஜ்பாய்தானே வெளியுறவுத்துறை அமைச்சர்? அப்போது இதற்காக என்ன செய்தார்?

1974 கச்சத்தீவு ஒப்பந்தம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது மட்டுமின்றி கடல் எல்லை குறித்த பன்னாட்டுச் சட்டங்களுக்கும் எதிரானது. ‘‘பாக் நீரிணைக்கும் ஆதம் பாலத்திற்கும் இடையே உள்ள இலங்கை ஸ்ரீ இந்திய வரலாற்று நீர் எல்லையை வரையறுக்கும் ஒப்பந்தம்’’ என்று சட்டச் சொற்களில் குறிக்கப்படும் கச்சத்தீவு ஒப்பந்தம் கையெழுத்தாகிய போது 1958 ஆம் ஆண்டு ஐ.நா. சட்டம் செயலில் இருந்தது.

‘கடல் பரப்பு குறித்த ஐக்கிய நாடுகள் அவை ஒப்பந்தம், 1958’ (1958 UN convention on continental shelf) இரண்டு நாடுகளுக்கிடையில் கடல் எல்லையை பிரித்துக் கொள்ளும் போது கடை பிடிக்க வேண்டிய விதி முறையையும் கூறுகிறது.

இரண்டு அண்டைநாடுகள் தங்களுக்கிடையிலுள்ள கடல் எல்லையை வரையறுக்கும் போது தங்களுக்கிடையே இருக்கிற கடல் பரப்பை சரி பாதியாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இரண்டு கடற்கரையிலிருந்தும் சம தொலைவில் இந்த எல்லைக் கோடு கிழிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

## மீன் பிடி உரிமை இல்லை என்றவர் மோடி

கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து தரவில்லை என 2013இல் இந்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் உறுதிமொழி வழங்கியுள்ளது. கச்சத்தீவு ஒப்பந்தம் செல்லாது என தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. கச்சத்தீவு ஒப்பந்தப்படி கச்சத்தீவு பகுதியில் இந்திய மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை இல்லை என இந்திய ஒன்றிய அரசு, நீதிமன்றத்தில் உறுதிமொழி பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

தமிழகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்கும், மத்திய அரசின் செயல் குறித்து, தமிழக முதல்வரும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோதிக்கு தமிழக மக்களுக்கு நியாயம் கோரி கடிதம் அனுப்பியுள்ளனர்.

உண்மை நிலைமை இப்படி இருக்க கடந்த 10 ஆண்டுகளாக இது குறித்து எந்த விரல் அசைவையும் மேற்கொள்ளாத மோடி அரசுதான் இன்று கச்சத்தீவை பெரும் பிரச்சினையாக்கி தமிழ்நாட்டில் குளிர் காயலாம் என்று கணக்கு போடுகிறது.

கடந்த 2014 தேர்தல் பரப்புரையிலேயே குஜராத் மீனவர்கள் போல தமிழ்நாட்டு மீனவர்களும் பாதுகாக்கப்படுவார்கள் நமது கடல் எல்லைக்குள் இலங்கை கப்பல் படையோ அதன் பாதுகாப்பு படையோ நுழைய அனுமதிக்க மாட்டேன் என்று அறிவித்து சொன்னவர் தான் மோடி!

ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் இதற்கான முயற்சி என்ன?

### கச்சத்தீவு ஒப்பந்தத்தை எதிர்த்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

கச்சத்தீவு ஒப்பந்தம் ஏற்பட்ட போது அதை எதிர்த்து களத்தில் இறங்கிப் போராடியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. காலம் சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் **கல்யாண சுந்தரம்** அவர்கள் தலைமையில் சுமார் ஆயிரம் படகுக்களோடு கச்சத்தீவிற்கு மீனவர்களை அணிதிரட்டி புறப்பட்டபோது அது தடுத்து நிறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டனர்.

அதன் பிறகு தொடர்ச்சியாக அதை திரும்பப் பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி வந்திருக்கிறது இன்றைய பொதுச் செயலாளர் **டி.ராஜா** மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோது கச்சத்தீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அதனை மாற்றி அமைத்து மறு வரைவு செய்வதற்கு இந்திய அரசு முன்வர வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பேசியதும் குறிப்பிடத்தக்கது. காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து பிரிவு 370 ஐ அந்த மாநில மக்களின் கருத்தறியாமல் எப்படி திடீரென்று மோடி அரசுக்கு நீக்கியதோ அதை போல் தான் அன்றைய ஒன்றிய அரசும் தமிழ்நாட்டின் கருத்தை எல்லாம் அறியாது அவசரகதியில் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திற்று.

இதுகுறித்து திமுக மீது குற்றம் சாட்டுவது முன்னாள் முதல்வர் கலைஞர் மீது குற்றம் சாட்டுவது வீண் பழிபோட்டு இன்றைய மோடி அரசு தப்பிக்கும் முயற்சியை தவிர வேறு எதுவும் இல்லை. கடந்த 10 ஆண்டுகளாக எள் முனை அளவு கூட இதற்காக முயற்சிக்காது இப்போது தேர்தலுக்காக மட்டுமே இதனை பேசி வருவது அதைவிட வெட்கக்கேடு! துடைத்தெறிவோம் பாஜகவை

தொடர்புக்கு: 9444481703

**▶ உலக நாடுகளை ஒன்னு விடாம சுத்தியாச்சு!**
**▶ ஊழலை அங்கெல்லாம் பரப்பியாச்சு! ▶ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**

# தொழிலாளர்கள் வாழ்வை பறித்த மோடி அரசை வீழ்த்துவோம்!

# இண்டியா அணி வெல்லட்டும்!



ம.இராதாகிருஷ்ணன்





**நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களில் 60 விழுக்காட்டினர் தொழிலாளர்கள் ஆவர். பாஜகவின் 2014 தேர்தல் அறிக்கையில் "தொழிலாளர் படை நமது வளர்ச்சியின் தூண்" என்று தலைப்பிட்டு "பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கு உழைப்பு முக்கியமானது என்பதையும், அவற்றை நிர்வகிக்கும் சட்டங்களும் முக்கியம் என்பதையும் பாஜக அங்கீகரிக்கிறது.**

முரண்பாடான தொழிலாளர் சட்டங்களை மதிப்பாய்வு செய்வோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மோடி நாட்டின் வளர்ச்சிக்கு கார்ப்பரேட்டுகள் தான் காரணம் என்று பேசினார். அவருக்கு ஒத்து ஊதும் ஊது குழலாக நிட்டி ஆயோக் 10. அதானிகளும், 20 அம்பானிகளும் உருவானால் நாடு வளர்ச்சி பெறும் என்றது. ஆக 57 கோடி வாக்காளர்களான தொழிலாளர்களை ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்று தெளிவாகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கைகளில் தொழிலாளர் என்ற சொல்லே இல்லை.

முதல் தரப்பு தொழிலாளர்கள், இரண்டாம் தரப்பு முதலாளிகள், மூன்றாம் தரப்பு அரசு. இதில் மூன்றாம் தரப்பான அரசாங்கத்தின் வேலை இரண்டாம் தரப்பு, முதலாளிகளிடமிருந்து, முதல் தரப்பு தொழிலாளர்களுக்கு உரிய பங்கு கிடைக்கச் செய்வதே ஆகும்.

ஆனால் தொழிலாளர்கள் போராடி 150 ஆண்டு காலமாகப் பெற்ற சட்டங்கள் 44 ஐ சில நொடிகளில் தூக்கி எறிந்தது மோடி அரசு. தொழிலாளர் தரப்பும், முதலாளிகள் தரப்பும் சொன்னதை கேட்காமல் புறக்கணித்து 44 சட்டங்களில் 29 சட்டங்களை மட்டும் எடுத்து அதில் ஏற்கனவே கொஞ்ச நஞ்சம் இருந்த உரிமைகளையும் அகற்றி நான்கு சட்டத் தொகுப்புகளாக நிறைவேற்றியது. எதிர்க் கட்சிகள் எதுவும் நாடாளுமன்றத்திற்குள் இல்லாத நேரம் பார்த்து இந்த காரியத்தை செய்தார்கள்.

ஐ.எல்.சி. முடிவுகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு சட்டமாக்கப்படும். ஆனால் மோடி 2015 ஆம் ஆண்டு ஐஎல்சி கூட்டினார். அங்கே அரசு, முதலாளிகளின் அமைப்பு, தொழிற்சங்கங்கள் உடன் அவர் பேசுவதைக் கேட்டு கைதட்ட ஐஎல்சி க்கு சம்மந்தம் இல்லாத ஒரு விசில் அடிக்கும் கூட்டத்தையும் சேர்த்து அழைத்து வந்தார். இதற்கு முன் எப்போதும் இல்லாத மோடியின் வினோதமான நடவடிக்கையை கண்டு தொழிற்சங்கங்களும், முதலாளிகள் அமைப்பும், அனுபவம் வாய்ந்த அரசு அதிகாரிகளும் முகம் சுளித்தனர். தவறு என்று மோடிக்கு தெரிவித்தனர்.

அதோடு சரி; ஐஎல்சி! அதன் பின்னர் கூட்டப்படவே இல்லை. ''அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து'' என்ற தேர்தல் வாக்குறுதி காற்றில் பறந்து விட்டது. தொழிலாளர், வேலையளிப்பவர் பிரச்சினையில் அரசு பஞ்சாயத்து செய்யும் மூன்றாவது தரப்புதான். ஆனால் மூன்று தரப்பின் மொத்த குத்தகையை தானாகவே மோடி அரசு எடுத்துக் கொண்டது. உலகில் எந்த நாட்டிலும் இல்லாத, இந்தியாவில் 1942 ஆம் ஆண்டு முதல் கடைபிடித்து வந்த முறை, மோடி அரசின் ஆணவத்தால் கைவிடப்பட்டது.

தொழிற்சங்கங்கள் இடையறாது ஒன்றுபட்டு போராடியதால் இந்த சட்டத் தொகுப்புகள் அமுலுக்கு கொண்டு வர முடியவில்லை. இவை நான்கையும் திரும்பப் பெறவேண்டும் என்பதே தொழிற்சங்கங்களின் கோரிக்கை.

நான்கு சட்டத் தொகுப்புகள் செயலுக்கு வரும் முன்பே 30 கோடி தொழிலாளர்கள் திட்டம், கிக், பிக்ஸட் டேம், நீம் உள்ளிட்ட பெயர்களில் தொழிலாளர் என்ற வரையறையில் இருந்தே விரட்டி அடிக்கப்பட்டு விட்டனர். அதாவது ஆஷா, அங்கன்வாடி போன்ற தொழிலாளர்கள் திட்டத் தொழிலாளர்கள் என்றும், இணைய வழியில் உணவுப் பொருள் உள்ளிட்டவற்றை வீட்டில் வந்து கொடுக்கும் தொழிலாளர்கள் கிக் தொழிலாளர்கள் ஆவர்.

27 கோடியே 73 லட்சம் தொழிலாளர்களின் எதிர்காலத்திற்கான சேமிப்புகளைப் பராமரித்துவரும் EPFO அமைப்பு தொடர்ந்து அதானி எண்டர்பிரைசஸ் மற்றும் அதானி துறைமுக மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனங்களில் 1.65 லட்சம் கோடி ரூபாயை முதலீடு செய்தது. நிலைகுலைந்த அதானியை காப்பாற்ற தொழிலாளி பணம் சூறையாடப்பட்டது. அந்தத் தொழிலாளர்களின் எதிர்காலத்திற்கு கேள்விக் குறியாகி நிற்கிறது.

அமைப்பு சாரா துறையில் தொழிலாளர்கள் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வோம் அடையாள அட்டைகளை வழங்குவோம். அவர்களுக்கு நல்ல தரமான சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்யப்படும். தகுந்த பயிற்சித் திட்டங்கள் மூலம் அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும். அனைத்து வகையான தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் சுகாதாரக் காப்பீடு பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துவோம்'' என்று தேர்தல் அறிக்கையில் சொல்லி விட்டு கட்டிட தொழிலாளர் சட்டத்தை செயலிழக்கச் செய்து, அதில் உள்ள ரூபாய் ஒரு லட்சம் கோடி தொழிலாளர் பணத்தை ஏப்பம் விட திட்டம் தீட்டி வருகின்றனர். 'இ' ஷ்ரம் எனும் பெயரில் 30 கோடி தொழிலாளர்களை பதிவு செய்து; அவர்கள் நலனுக்காக இது வரை ஒரு பைசா கூட ஒதுக்கவில்லை. ஒன்றிய அமைப்புசாரா தொழிலாளர் சட்டம் உயிரோடு இருக்கிறதா? இல்லையா? என்று தெரியவில்லை.

2014 தேர்தலின் போது ''நாட்டை மீட்பதற்காக கடவுள் என்னை தேர்வு செய்துள்ளார். நான் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுப்பதற்காக இங்கே வரவில்லை. உங்கள் சேவகனான எனக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள். 60 ஆண்டுகளில் அவர்கள் செய்யாததை நான் செய்வேன். 60 மாதங்களில் இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன்'' என்றார் மோடி.

எல்லா வகையிலும் நாட்டை பின்தங்கச் செய்து, நெருக்கடிக்கு கொண்டு வந்துவிட்டது.

ஜனநாயக கூட்டணி, பாஜக எல்லாம் போய் மோடி, மோடி என்று மாறி இருக்கிறது. இது நாட்டுக்கு பேராபத்து.

தொழிலாளர் படை நமது வளர்ச்சியின் தூண் என்றனர். ஆனால் அந்த தூணை தரைமட்டமாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். 96.88 கோடி வாக்காளர்களில் 57 கோடி பேர் தொழிலாளர்கள். தங்கள் வாழ்வை பறிக்கும் மோடி அரசை நிச்சயமாக வீட்டுக்கு அனுப்புவார்கள்.

இந்தியாவைக் காக்க 'இண்டியா' அணி வெல்லும்.


## ஏழ்மையை விரட்டு வாக்குறுதி என்னாச்சி

ஏழையாக பிறந்து ஏழையாகவே வளர்ந்தவன். ஏழையின் வலியை நன்கு உணர்ந்தவன் என்பதால் ஏழ்மையை போக்குவதே எனது முதல் கடமையாக நினைத்து பணியாற்றுவேன் என தமிழ்நாட்டின் ராமநாதபுரத்தில் 2014 ல் சொன்னார். 60 மாத அவகாசம் கேட்டவருக்கு 120 மாதம் கழிந்த பின்னர், உலகின் பட்டினி குறியீட்டில் இந்தியா, சோமாலியாவைவிட பின் தங்கி இருக்கிறது. 19 கோடியாக இருந்த வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழைகளின் எண்ணிக்கை 25 கோடியை தாண்டி இருக்கிறது.

விவசாயிகள் 700 க்கும் அதிகமானோர் போராட்டகளத்தில் உயிரை பலி கொடுத்த பின்பும், விவசாயிகளின் ஏழ்மையை போக்கும் திட்டம் மோடியின் மூளையில் உதிக்கவே இல்லை. விவசாயிகளுக்கு வட்டி இல்லா கடன், 60 வயதில் ஓய்வூதியம் உள்ளிட்ட வாக்குறுதிகள் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது.


கிராமப்புற மேம்பாட்டுகாக ரூபாய் 25 லட்சம் கோடி ஒதுக்கப்படும் என்று பாஜக தேர்தல் அறிக்கை 2019 தெரிவிக்கிறது. ஆனால் நாட்டு மக்களின் பணம் ரூபாய் 25 லட்சம் கோடி கார்ப்போரேட் பெருமுதலாளிகள் வங்கி கடனுக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்த தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம், அதற்கான நிதி 2024–25 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 86.000 கோடி. இதில் ஏற்கனவே கொடுக்க வேண்டிய ரூ.32,000 கோடியை கழித்துவிட்டால் ரூ.54,000 கோடிதான்.

பதிவு செய்த 6 கோடி தொழிலாளர்களின் வேலை ஏற்கனவே பறிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு எஞ்சிய தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 25 நாள் கூட வேலையளிக்க முடியாது. இந்த நிலையில் கூலியை உயர்த்தினால் ஆண்டுக்கு வேலை கிடைக்கும் நாட்களின் எண்ணிக்கை இன்னமும் குறையும். 365 நாட்கள் உள்ள ஆண்டில் 20 நாட்கள் மட்டும் வேலை தந்தால் எஞ்சிய நாட்கள் இத்தொழிலாளர்கள் காற்றைக் குடித்தா வாழ முடியும்?! என்னே தொழிலாளர் படையின் மீது கருணை!



> தங்கத்தின் விலை தாறுமாறா ஏறிடுச்சு!
> பெட்ரோல், டீசல் விலையோ அடங்க மறுக்குது!
> மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!

# மோடியின் பொய்கள்

| மோடி சொன்னது | உண்மை நிலவரம் |
|---|---|
| நான் அளிக்கும் வாக்குறுதிகளில் மக்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. | ➤ ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு?<br>➤ அனைவருக்கும் 15 லட்சம் ரூபாய்?<br>➤ விவசாய விலை பொருளுக்கு 150% விலை நிர்ணயம்?<br>➤ ஒன்றும் நிறைவேறவில்லை விவசாயிகளும், மக்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். |
| உலக அளவில் கொரோனா இறப்பு விகிதம் இந்தியாவில் மிக மிகக் குறைவு. | ➤ இந்திய அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி 4.89 லட்சம் மரணங்கள் பதிவாகியுள்ளன.<br>➤ ஆயிரக்கணக்கான கி.மீ. தூரத்தை புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் நடந்தே கடந்தன.<br>➤ சிறப்பு ரயில்களுக்கு மாநில அரசிடம் கட்டணம் கேட்டு வாங்கியது மோடி அரசு. |
| பாஜக அரசு கோவிட் 19 பெருந்தொற்றை சிறப்பாக கையாண்டது. | ➤ ‘தி ஆஸ்திரேலியன்’ பத்திரிகை தொடங்கி வாஷிங்டன் போஸ்ட் வரை அனைத்து உலக ஊடகங்களும், மோடி கொரோனா ஒழிப்பு தோல்வியை தழுவியவர் என்று கழுவிக் கழுவி ஊற்றின. |
| நான் வறுமையில் வாழ்ந்தேன். ஏழையாக இருப்பது என்னவென்று எனக்குத் தெரியும். | ➤ மோடி பயன்படுத்தும் கூலிங் கிளாஸ் விலை மட்டும் ரூபாய் 1.42 லட்சம்.  |
| கடந்த பத்து ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் பாஜக அரசு சாதித்துக் கட்டியுள்ளது (5.3.2024) | ➤ பத்து ஆண்டுகளில் 23 பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. |
| சர்தார் பட்டேலின் இறுதிச் சடங்கில் கூட நேரு பங்கேற்கவில்லை. | ➤ பட்டேல் இறுதிச்சடங்கில் நேரு கலந்து கொண்டார். இதனை மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதை பாகம் 1 பக்கம் 271 குறிப்பிட்டுள்ளார். |
| அடுத்த பத்து ஆண்டுகளில் உலக நாடுகளுக்கு இந்தியா ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும். (27.1.2014) | ➤ கடந்த கடந்த 10 ஆண்டுகளில் எந்த ஆயுதமும் ஏற்றுமதி செய்யப்படவில்லை.<br>➤ பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகள் 100% அந்நிய முதலீட்டோடு இந்தியாவுக்குள் வந்து ஆயுதங்களைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>➤ இந்தியாவின் பாதுகாப்புத் துறை தொழிற்சாலைகளிலேயே தனியார் வந்து உற்பத்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| ஏழைகள் இளைஞர்கள் விவசாயிகள் பெண்கள் ஆகியோர்தான் இந்தியாவின் தூண்கள். (10.2.2024) | ➤ டெல்லி எல்லையில் போராடுகிற இளைஞர்கள் ஏழை விவசாயிகளை மீது, ட்ரோன் மூலமாக வானவெளியில் இருந்து கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, ரப்பர் குண்டுகளால் துப்பாக்கிச் சூடு, அவர்களைச் சுற்றி சித்திரவதை முகாம் போல் முள்வேலி அமைப்பு, சாலைகளில் ஆணிப் பட்டைகள் அடிப்பது, கூரான கடப்பாறைகளை பொருத்துவது, தடியடி, சாலையை மறித்து மதில் சுவர் கட்டுவது என மனிதத்தன்மையற்ற முறையில் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருக்கிறது மோடி அரசு. |
| இந்திய மொழிகள் பன்முகத் தன்மை கொண்டவை. இந்தப் பன்முகத்தன்மை தான் நமது ஜனநாயகத்தின் மிகப்பெரிய பலம். | ➤ சட்டங்கள், திட்டங்கள் ஆகியவற்றின் பெயர்களை ஹிந்தியில் வைப்பது உட்பட, அனைத்து வகைகளிலும் இந்தியை திணித்து வருவது நாடறிந்த உண்மை.<br>➤ கடந்த மூன்று ஆண்டுகளில் மக்களால் பேசப்படுகிற இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒடிய ஆகிய ஐந்து மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்டது வெறும் 29 கோடி ரூபாய். ஆனால் யாராலும் பேசப்படாத சம்ஸ்கிருதத்தின் மேம்பாட்டுக்கு மோடி அரசு செலவழித்தது 643.84 கோடி. அந்த ஐந்து மொழிகளை விட 22 மடங்கு அதிகத் தொகை. |
| கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக 600 கோடி மக்கள் ஓட்டு போட்டு என்னை பிரதமராக தேர்வு செய்து இருக்கிறார்கள். (23.1.2018) | ➤ இந்தியாவின் மக்கள் தொகையை 142.78 கோடி தான். அதிலும் வாக்குரிமை பெற்றவர்கள் 94.50 கோடி மக்கள் தான். அவர்களது வாக்குகளிலும் 37% மட்டுமே மோடி கட்சிக்கு கிடைத்தது.   |
| குடியுரிமை பறிக்கப்பட்டு, அவர்களை வைப்பதற்கு தடுப்பு முகாம்கள் இந்தியாவில் எங்கும் இல்லை. (22.12.2019) | ➤ அசாம் தடுப்பு முகாம்களில் குடியேறிகளாக சந்தேகிக்கப்படுவோர் தடுத்து வைக்கப்பட்டு அவர்களில் 28 பேர் மரணம் அடைந்து இருக்கிறார்கள் மாநிலங்களவையில் அமித்ஷா பதில். (நவம்பர் 2019) |
| 1988ல் மின்னஞ்சல் மூலம் புகைப்படத்தை டெல்லிக்கு அனுப்பினேன். |  ➤ இந்தியாவில் இணைய அணுகல் திட்டம் 1995 ஆகஸ்ட் 15 தான் நடைமுறைக்கே வந்தது. |
| Vibrant Gujarat global investment summit ல் 52 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 45,000 கோடி டாலர் மதிப்பிலான 7936 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது. (13.1.2011) | ➤ அந்த ஆண்டில் இந்தியாவுக்கு வந்த மொத்த அந்நிய நேரடி முதலீடு 3038 கோடி டாலர்தான். இதில் குஜராத்துக்கு கிடைத்தது வெறும் 2.38% மட்டுமே.  |
| எத்தனையோ யுத்தங்களில் ஏராளமான இந்திய வீரர்கள் தமது இன்னுயிரை கொடுத்திருந்தும், அவர்கள் தியாகங்களைப் போற்றும் படியாக ஒரு நினைவுச் சின்னம் கூட இந்தியாவில் இல்லை. (27.1.2014) |   ➤ முதல் உலக யுத்தத்தில் பங்கு எடுத்த இந்திய வீரர்களின் நினைவாக தலைநகர் டெல்லியின் மத்தியில் எழுப்பப்பட்டது தான் இந்தியா கேட். அதன் முன்பு எப்போதும் அணையாத அமரஜோதி ஏற்றப்பட்டு இப்போதும் எரிந்து கொண்டிருக்கிறது. சென்னை உள்பட பல்வேறு நகரங்களில் போர் நினைவு சின்னங்கள் உள்ளன. |
| ரயில்வே திட்டங்களால் தொழிலாளர்கள் முதல் பொறியாளர்கள் வரை ஏராளமான வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர். (26.2.2024) | ➤ இந்திய ரயில்வேயில் 2023 ஜூலை வரையில் 2,50,965 பணியிடங்கள் காலியாக உள்ளன. இது போக ஐ.ஆர்.சி.டி.சி. உள்ளிட்ட பல ரயில்வே பிரிவுகள் தனியாருக்கு தரப்பட்டு அங்கு அற்றை கூலிகளாக தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.. |
| சிறு குறு தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. சுய வேலைவாய்ப்பு திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. (27.2.2024) | ➤ மோடியின் பத்தாண்டு கால ஆட்சியில் 2.5 கோடி சிறு குறு நடுத்தர தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. கிட்டத்தட்ட இதே எண்ணிக்கை யிலான தொழிற்சாலைகள் எப்போது மூடப்படும் என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.  |
| நான் யாருடைய மதத்தையும் குறிப்பிட்டு பேசியதே இல்லை. (22.12.2019) | ➤ சேலத்தில் நடந்த கூட்டத்தில், “எதிர்க்கட்சிகள் இந்துக்களையே குறை கூறுகின்றன. வேறு மதங்களை பேசுவதில்லை. சக்தியை வழிபடுபவர்கள் நீங்கள். இந்தத் தேர்தலோடு எதிர்க்கட்சிகள் துடைத்தெறியப்பட வேண்டும்.”<br>➤ அவர் அடிக்கடி சொல்வது “எதிர்க்கட்சிகள் சிறுபான்மை யினரை தாஜா செய்யும் அரசியல் நடத்துகின்றன.” |
| பாஜக ஆட்சியில் விலைவாசிகள் குறைந்து கொண்டே செல்கின்றன. | ➤ இது பொய்யென நிரூபிக்க அவசியமே இல்லை.<br>➤ பெட்ரோல், டீசல் விலை உயர்வு அனைத்து பொருள்களின் விலையையும் உயர்த்தியது.<br>➤ உணவுப் பொருள்களின் விலை 50% முதல் 150% வரை உயர்ந்துள்ளன.<br>➤ போதாக்குறைக்கு ஜிஎஸ்டி, விலையை இன்னும் உச்சத்துக்கு கொண்டு சென்றது. |
| கடந்த 9 ஆண்டு கால பாஜக ஆட்சியில், நாட்டின் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. (31.10.2023) | ➤ சிக்கிம் மாநிலம் டோக்லாமிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் சீன ராணுவம் புதிய பதுங்கு குழிகளை அமைத்திருக்கிறது. அருணாச்சலப்பிரதேசத்தில் சுமார் 60 கிலோ மீட்டர் பரப்பளவை சீனா ஆக்கிரமித்துள்ளது. நதிக்கரையில் 101 வீடுகளையும் கட்டி இருக்கிறது. |
| "நான் பழங்குடியினருக்கு சேவை செய்யவே பிறந்தவன்." | ➤ பழங்குடி பெண்கள் நிர்வாணமாக தெருவில் இழுத்து வரப்பட்ட போதும் மணிப்பூருக்கு மோடி செல்லவில்லை.<br>➤ மூன்று மாத காலம் வாய் திறந்து கூட பேசவில்லை.<br>➤ பத்து லட்சத்துக்கு மேற்பட்ட பழங்குடி மக்கள் தமது வாழ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். |
| பழங்குடி பகுதிகளில் வசிக்கும் மக்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என மத்திய அரசு உறுதி கொண்டுள்ளது. (14.1.2024) | ➤ கார்ப்பரேட்டுகள் கனிம வளங்களை, வரைமுறையின்றி சூறையாடுவதற்கு சாதகமாக, வனப் பாதுகாப்பு திருத்தச் சட்டம், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியது மோடி அரசு. |
| மறைமுக வரி விதிப்பில் சீர்திருத்தம் செய்ய எல்லா மாநில அரசுகளோடும் ஆலோசனை செய்வோம்; மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஆதாரங்களை வழங்குவோம். | ➤ ஜிஎஸ்டி வரி விதிப்பின் மூலம் மாநிலங்களுக்கு நிதி வருவாய் ஏதும் இல்லாமல் வழித்து எடுக்கப்பட்டது.<br>➤ ஜிஎஸ்டி இழப்பீடு வழங்கும் காலத்தை கூட நீட்டிக்க முடியாது என்று மோடி அரசு கூறிவிட்டது.<br>➤ 17வது நிதிக்குழுவில் 5.3% ஆக இருந்த மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு, 15 வது நிதி குழுவில் 4.57% ஆக குறைந்து விட்டது.<br>➤ தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசு வசூலிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் வெறும் 29 பைசாக்களே மாநில அரசுக்கு தரப்படுகிறது. |

**➤ மாட்டைக் கொன்றவனுக்கு மரண தண்டனை கொடுத்தாச்சு!**

**➤ மாட்டு இறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செஞ்சாச்சு!**



**➤ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**

| | |
|---|---|
| 1987 – 88 காலகட்டத்தில் டிஜிட்டல் கேமராவை பயன்படுத்தி அத்வானி அவர்களை வண்ணப் புகைப்படம் எடுத்தேன். | ➤ இந்தியாவில் டிஜிட்டல் கேமராக்கள் 1990க்கு பின்பு தான் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| என்னுடைய 16 வது வயதிலேயே இந்த நாட்டிற்காக வீட்டை விட்டு வெளியேறினேன். | ➤ பிரதமர் மோடிக்கு அவரது 18வது வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்டது. அதன் பிறகு சில காலம் கழித்து தான், மனைவியைப் பிரிந்து வந்தார். |
| மத்திய பாஜக அரசு தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் கச்சை கட்டிக் கொண்டு பணியாற்றி வருகிறது. | ➤ தமிழ்நாட்டுக்கு முறையான நிதிப் பகுதியை தரவில்லை.<br>➤ பதினோரு மாவட்டங்கள் வெள்ளத்தால் பெரும் பாதிப்புக்கு ஆளான போது ஒரு ரூபாய் நிதி கூட தரவில்லை.<br>➤ சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பகுதியில் எந்த நிதியும் தரவில்லை.<br>➤ இதற்கு அடுத்த நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு எம்பிகளின் விகிதத்தை குறைக்கும் நடவடிக்கையில் மோடி அரசு ஈடுபட்டுள்ளது. |
| தேசத்தின் எதிர்காலத்தை பற்றி சிந்தித்து செயல்படுகிறேன் (4.3.2024) | ➤ உலகத்தின் 15 கடும்பட்டினி நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கிறது.<br>➤ உலகத்தில் மிக அதிக எண்ணிக்கையிலான ஏழைகள் இந்தியாவில் வசிக்கின்றனர்.<br>➤ ஆனால் அம்பானி, அதானி ஆகியோர்உலகப் பெரும் பணக்காரர்கள் பட்டியலுக்கு சென்றுள்ளனர். |
| மேகக் கூட்டங்கள் அதிகமாக இருந்ததால், அவற்றில் மறைந்து பாகிஸ்தான் ராடாரில் இருந்து நமது விமானங்கள் தப்பிக்க முடியும் என்பதால், தாமதிக்காமல் புறப்படுங்கள் என்று ராணுவத்துக்கு உத்தரவிட்டேன். | ➤ ராடார் தொழில்நுட்பம் என்பது ரேடியோ கதிர்வீச்சின் மூலம் செயல்படக்கூடியது. ரேடியோ கதிர்வீச்சில் இருந்து மேகக் கூட்டங்களால் விமானத்தை பாதுகாக்க முடியாது. மேலும் மோசமான வானிலையில் விமானங்கள் சென்றால் அதன் செயல் திறன் பாதிக்கப்படும்.  |

| | |
|---|---|
| முந்தைய அரசை விட வேலை வாய்ப்புகளை 1.5 மடங்கு அதிகமாக வழங்கியுள்ளோம். (12.2.2024) | ➤ கடந்த 10 ஆண்டுகளில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்துள்ளது.<br>➤ சட்டப் பாதுகாப்பு கொண்ட நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை வேகமாகக் குறைக்கப்பட்டு விட்டது.<br>➤ அரசு வேலைக்காக 22.5 கோடி பேர் விண்ணப்பித்த நிலையில் 7.2 லட்சம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு தரப்பட்டுள்ளது. |
| ஒவ்வொரு முறை தமிழ்நாட்டுக்கு வரும்போதும் மிகுந்த உற்சாகம் அடைகிறேன். எனக்கு தமிழக மக்கள் மீது மிகுந்த ஈர்ப்பும் அன்பும் இருக்கிறது. | ➤ தமிழ்நாடு பலமுறை புயல் மழை தாக்குதலை எதிர்கொண்டது. ஒருமுறை கூட மோடி எட்டிப் பார்க்கவில்லை.<br>➤ வேறு மாநிலங்களில் தமிழர்களுக்கு வேலை தராதது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு பணி, ரயில்வே, பொதுத்துறை நிறுவனங்களில் தமிழர்களுக்கு வேலை தரப்படவில்லை. |
| ஜவுளித்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு முழு ஆதரவு அளிக்கும். (26.2.2024) | ➤ பருத்தி, நூல் விலை ஏற்றத்தால் தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முடங்கி கிடக்கிறது.<br>➤ ஜிஎஸ்டி சுமையால் திருப்பூர் பனியன் தொழில் அழிகிறது.<br>➤ உலகெங்கும் திருப்பூர் பனியன் விற்ற காலம் போய், திருப்பூரிலேயே பங்களாதேஷ் பனியன்கள் சந்தைக்கு வருகின்றன. |
| புனித ரமலான் மாதத்தில் அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி, ஆரோக்கியம், செழிப்பு மலரட்டும். | ➤ மதரீதியாக பிளவு படுக்கும் செயல்களை ஒவ்வொரு நாளும் செய்கிறது பாஜக.<br>➤ குடியுரிமை திருத்தச் சட்டத்தை தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னால் செயல்படுத்தியது பாஜக.<br>➤ அப்பீஸ்மண்ட் பாலிசி (சிறுபான்மையினரை தாஜா செய்யும் அரசியல்) என்று அடிக்கடி பேசுபவர் மோடி.  |

## டி.ராஜா, இரா.முத்தரசன், மு.வீரபாண்டியன் தேர்தல் பரப்புரை பயணம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோரின் நாடாளுமன்றத் தேர்தல் சுற்றுப்பயண விவரம்:

| தேதி | கிழமை | தொகுதி |
|---|---|---|
| **டி.ராஜா** | | |
| 08.04.2024 | திங்கள் | சென்னை |
| 09.04.2024 | செவ்வாய் | விழுப்புரம், திருக்கோயிலூர் |
| 10.04.2024 | புதன் | சிதம்பரம் |
| 11.04.2024 | வியாழன் | நாகப்பட்டினம் |
| 12.04.2024 | வெள்ளி | மதுரை |
| **இரா.முத்தரசன்** | | |
| 06.04.2024 | சனி காலை | திருச்சி மாநகர், திருவெறும்பூர் |
| | சனி மாலை | மணப்பாறை |
| 07.04.2024 | ஞாயிறு | விழுப்புரம் |
| 08.04.2024 | திங்கள் காலை | கடலூர் |
| | திங்கள் மாலை | சிதம்பரம், சீர்காழி |
| 09.04.2024 | செவ்வாய் காலை | கடலூர் |
| | செவ்வாய் மாலை | சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில் |
| 10.04.2024 | புதன் | தஞ்சாவூர் தெற்கு |
| 11.04.2024 | வியாழன் | நாகப்பட்டினம் தொகுதி |
| 12.04.2024 | வெள்ளி | திருப்பூர் தொகுதி |
| 13.04.2024 | சனி காலை | தேனி, |
| | சனி மாலை | திண்டுக்கல் |
| 14.04.2024 | ஞாயிறு காலை | சத்தியமங்கலம் |
| | ஞாயிறு மாலை | கோவை |
| 15.04.2024 | திங்கள் காலை | இராமநாதபுரம் |
| | திங்கள் மாலை | விருதுநகர், தென்காசி |
| 16.04.2024 | செவ்வாய் | தூத்துக்குடி |
| 17.04.2024 | புதன் | நாகப்பட்டினம் தொகுதி |
| **மு.வீரபாண்டியன்** | | |
| 06.04.2024 | சனி | மதுரை |
| 07.04.2024 | ஞாயிறு | சிவகங்கை |
| 08.04.2024 | திங்கள் | புதுக்கோட்டை |
| 09.04.2024 | செவ்வாய் | இராமநாதபுரம் |
| 10.04.2024 | புதன் | நாகப்பட்டினம் |
| 11.04.2024 | வியாழன் | நாகப்பட்டினம் |
| 12.04.2024 | வெள்ளி | புதுவை |
| 13.04.2024 | சனி | சிதம்பரம் |
| 14.04.2024 | ஞாயிறு | விழுப்புரம் |
| 15.04.2024 | திங்கள் | தென் சென்னை |
| 16.04.2024 | செவ்வாய் | மத்திய சென்னை |
| 17.04.2024 | புதன் | வட சென்னை |

## வங்கிப் பணத்தைச் சூறையாடியது யார்?




மோடி ஆட்சியில் வங்கிக் கடனை கட்டாதவர்கள் மற்றும் அரசு ஆதரவுடன் நாட்டைவிட்டு ஓடியவர்கள்:

1. விஜய் மல்லையா
2. மெகுல் சோக்சி
3. நீரவ் மோடி
4. நிஷான் மோடி
5. புஷ்பேஷ் பைட்யா
6. ஆஷிஷ் ஜோபான்புத்ரா
7. சன்னி கர்லா
8. ஆர்தி கர்லா
9. சஞ்சய் கர்லா
10. வர்ஷ் கர்லா
11. சுதிர் கர்லா
12. ஜதின் மேத்தா
13. உமேஷ் பரிக்
14. கம்லேஷ் பரிக்
15. நிலேஷ் பரிக்
16. வினய் மிட்டல்
17. ஏகல்வயா கர்க்
18. சேத்தன் ஜெயந்திலால்
19. நிதின் ஜெயந்திலால்
20. தீப்தி சேத்தன்
21. சவியா சேத்
22. ராஜிவ் கோயல்
23. அல்கா கோயல்
24. லலித் மோடி
25. ரிதேஷ் ஜெயின்
26. ஹிதேஷ் பட்டேல்
27. மயூரிபென் பட்டேல்
28. ஆஷிஷ் சுரேஷ் பாய்.

இவர்கள் ஏமாற்றிய வங்கி கடன் மொத்தம் 10 லட்சம் கோடி ரூபாய்

இவர்களில் எவரும் சீக்கியர் இல்லை.
இவர்களில் எவரும் முஸ்லீம் இல்லை;
இவர்களில் எவரும் கிறித்துவர் இல்லை.
இவர்களில் எவரும் தமிழர் இல்லை.
இவர்களில் எவரும் விவசாயி அல்லது தொழிலாளி இல்லை.
இன்னொரு பொதுவான அம்சம் விஜய் மல்லையா தவிர அனைவரும் குஜராத்தை சேர்ந்தவர்கள்!

வங்கியில் உள்ள மக்களின் பணத்தை காப்பாற்ற பா.ஜ.க.வை ஆட்சியை விரட்டுவது ஒன்றுதான் வழி!

◆ தேர்தல் ஆணையம் தலையாட்டும் பொம்மை ஆயிடுச்சு!
◆ ஜனநாயகம் மண்டியிடும் நிலையாயிடுச்சு!
◆ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!

# ‘ஆப் கி சர்க்கார்’ அல்ல இது, சர்க்கார் வைக்கும் ஆப்பு!

**ஐஎல்ஓ ஆய்வில் வெளிப்படும் உண்மை!**

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான, பன்னாட்டு தொழிலாளர் கழகம் (ஐஎல்ஓ) அமைப்பில் "இந்தியாவில் வேலை வாய்ப்பு அறிக்கை2024" வெளியிட்டுள்ளது

இதில் இந்தியாவில் வேலையின்மை எந்த அளவுக்கு தலைவிரித்து ஆடுகிறது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அதன் சுருக்கம் வருமாறு:


- கடந்த 10 ஆண்டுகளில் வேலையின்மை விகிதம் 5.7%ல் இருந்து 17.5%ஆக அதிகரித்துள்ளது.
- அதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில், வேலை கிடைக்காத இளைஞர்களின் எண்ணிக்கை இரு மடங்காகி இருக்கிறது.
- வேலை கிடைக்காத மக்கள் தொகை 83% பேர் 34 வயதுக்கு கீழுள்ள இளைஞர்கள்.
- வேலை செய்து கொண்டு இருப்பவர்களுக்கும் கூட உண்மை ஊதியம் மேன்மேலும் குறைந்து கொண்டிருக்கிறது.
- வேலை செய்பவர்களில் 90% க்கும் அதிகமானவர்கள் எந்த சட்டப் பாதுகாப்புமற்ற அமைப்புசாரா தொழிலாளர்களாக இருக்கிறார்கள்.
- நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை வெகுவேகமாக குறைந்து கொண்டிருக்கிறது.
- கல்வி, வேலைவாய்ப்பு, பயிற்சி ஆகியவற்றைப் பெறுவதில், ஆண்களை விட பெண்கள் ஐந்து மடங்கு பின்தங்கி இருக்கிறார்கள்.
- வேலையின்மை அதிகரிப்பதால் வருமானம் குறைகிறது. குடும்பங்களை நடத்த இயலாத நிலை ஏற்படுகிறது. உணவு, வீடு, உடல் நலம் போன்ற அடிப்படைத் தேவைகளைக் கூட பெற முடியாத சூழல் எழுந்துள்ளது.
- இதனால் வாழ்க்கை தரம் குறைந்து விட்டது. தங்களின் செலவைச் சுருக்குவதற்காக பட்டினி கிடக்கிறார்கள் அல்லது மீள முடியாத கடன்களில் மூழ்கிப் போய் இருக்கிறார்கள்.
- நீண்ட காலம் வேலையில்லாமல் இருப்பதால் அவர்களுடைய திறன் குறைகிறது. வேலை அனுபவம் மறுக்கப்படுகிறது. திரும்ப வேலைத்தளத்துக்குள் நுழையும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.
- இதனால் நாட்டில் வறுமை அதிகரிக்கிறது.
- விரக்தியான மனநிலை சமூகப் பதட்டத்தையும், குற்றங்களையும் அதிகரிக்கிறது.
- சுயமாக வருமானம் ஈட்டும் வழிகள் அடைக்கப்படுவதால், அரசாங்கத்தின் சமூக நலத்திட்டங்களை சார வேண்டிய நிலை ஏற்பட்டு அரசின் நிதிச்சுமை அதிகரிக்கிறது.

இவற்றையெல்லாம் நாம் சொன்னால் மோடி அரசு பொய் என்று கூத்தாடும். ஆனால் உலகத்தால் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு தொழிலாளர் கழகமே உண்மையை வெளிப்படுத்தி இருக்கிறது.

‘ஆப் கி சர்க்கார்’ (இது உங்கள் அரசு) என்று அடிக்கடி சொல்வார் மோடி. ‘ஆப் கி சர்க்கார் அல்ல, இது ஆப்பு வைக்கும் சர்க்கார்!

# ஆர்.எஸ்.எஸ் தலைவர் வீட்டில் 770 கிலோ வெடிமருந்து





கேரளம் மாநிலம் கண்ணூர் மாவட்டம் பானூரில் ஆர்எஸ்எஸ் வட்டாரத் தலைவர் பிரமோத் மற்றும் உறவினர் சாந்தாவின் வீடுகளில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 770 கிலோ வெடிபொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். உரிமம் இல்லாமல் சட்டவிரோதமாக வெடிபொருட்கள் வைத்திருந்தனர். இதுகுறித்து கொளவல்லூர் காவல்துறை யினர் 2 வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

# தேர்தல் 2024

## பாஜக இயக்கத்தில் நடக்கும் அதிமுக, பாஜக கூட்டணி



கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத ஊழல் ஆட்சியை நடத்தி வரும் பிரதமர் மோடிஊருக்கு உபதேசம் செய்யலாமா? பா.ஜ.க. டைரக்‌ஷனில் நடக்கும் அ.தி.மு.க - பா.ஜ.க. கள்ளக்கூட்டணிக்கு, பாதம்தாங்கி பழனிசாமி புதியதாக ஒரு கதை சொல்லி யிருக்கிறார்! டயலாக் என்ன தெரியுமா? பா.ஜ.க.வின் கூட்டணியில் இருந்ததால், விமர்சிக்க மாட்டாராம்! என்ன ஒரு பதில்! உண்மை அது இல்லை! அவரால் ஒருபோதும் பிரதமர் மோடியையோ, அமித்ஷாவையோ, ஆளுநரையோ ஏன், பா.ஜ.க.வில் இருக்கும் யாரையும் விமர்சிக்க முடியாது. ஏனென்றால் எஜமான விசுவாசம்! பதவி சுகத்திற்காகவும், ஊழல் வழக்குகளில் இருந்து தப்பிக்கவும், பா.ஜ.க.வின் அத்தனை மக்கள் விரோதத் திட்டங்களையும் ஆதரித்தவர் பழனிசாமி!

## பாலியல் குற்றவாளிகளை பாதுகாத்த பாஜக

நரேந்திர மோடி ‘பெண்களை கண்ணியமாக நடத்திட உறுதி செய்வோம்’ என்று தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி கொடுத்துள்ளார்!

தேசத்தின் மானம் காத்த மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த பாஜக எம்பி பிரிஜ் பூஷன் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்வதேச அளவில் அவமானப்பட்டு நாடு நின்றது. குற்றவாளிகளை பாதுகாத்தவர்கள் மோடியும், பிஜேபியும்.. மணிப்பூரில் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதிகளில் இழுத்து வரப்பட்ட போதும், அவமானப்படுத்தப்பட்ட போதும், கற்பழித்து கொல்லப்பட்ட போதும் பாதுகாப்பாக நின்ற கட்சி தான் பிஜேபி. காஷ்மீரில் சின்னஞ்சிறு குழந்தை ஆஷிபாவை கற்பழித்து கொன்று புதைத்த பாவிகளின் கூட்டம்! ஏராளமான பாலியல் குற்றவாளிகளை பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ள கார்ப்பரேட் ஆதரவு பிஜேபியை முறியடிப்போம்! இந்தியாவை காக்க இந்தியா கூட்டணியை ஆதரிப்போம்!

# தேர்தல் பத்திரம் உலகின் மிகப்பெரிய ஊழல்

**நிர்மலா சீத்தாராமன் கணவர் தாக்கு**




மோடி அரசின் முக்கிய ஊழல் திட்டமான தேர்தல் பத்திர திட்டத்தின் மூலம் பாஜக அரங்கேற்றிய பிரம்மாண்ட முறைகேடுகள் ஒவ்வொன்றாக அடுத்தடுத்து வெளியாகி வருகிறது. அமலாக்கத்துறை உள்ளிட்ட மத்திய அமைப்பு களை வைத்து மிரட்டியும், ஒன்றிய திட்ட ஒப்பந்தங்களை அளித்தும் தேர்தல் பத்திரம் மூலமாக ரூ.6,060 கோடிக்கும் அதிகமாக மோடியின் பாஜக கல்லா கட்டியுள்ளது.

இந்நிலையில், பாஜக அரசின் தேர்தல் பத்திரங்கள் என்பது உலகின் மிகப்பெரிய ஊழல் என ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமனின் கணவர் பரகலா பிரபாகர் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து பரகலா பிரபாகர் கூறுகையில், "ஒன்றிய பாஜக அரசு கொண்டுவந்த தேர்தல் பத்திரங்கள் என்பது உலகின் மிகப்பெரிய ஊழல் திட்டமாகும்.

முக்கியமாக 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த இந்தியாவும் பாஜகவுக்கு எதிராக உள்ளது" என கூறினார். நிதி அமைச்சராக இருக்கும் நிர்மலா சீத்தாராமனின் கணவரான பரகலா பிரபாகரின் கருத்து பாஜகவினரிடையே கடும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

# மகாராஷ்டிரா பாஜக கூட்டணிக்குள் குழப்பம், முட்டல், மோதல்



48மக்களவைதொகுதியை கொண்ட மகாராஷ்டிரா மாநிலத்தில் பாஜக தலைமை யிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் சிவசேனா (ஷிண்டே) தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார்) நவநிர்மாண் சேனா மற்றும் சின்னஞ்சிறிய கட்சிகள் உள்ளன.

மகாராஷ்டிராவில் முதற்கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 19 அன்று நடைபெறவுள்ள நிலையில், மோதல் போக்கு காரணமாக பாஜக கூட்டணியில் இன்னும் தொகுதி பங்கீடு முடிவடைய வில்லை.

மொத்தமுள்ள 48 தொகுதியில் பாஜக 26 முதல் 28 தொகுதியிலும், சிவசேனா (ஷிண்டே) 12 முதல் 14 தொகுதிகளிலும், தேசியவாத காங்கிரஸ் (அஜித்) 5 தொகுதியிலும் போட்டியிட உள்ளதாக அடிக்கடி தகவல் வெளியாகி வருகின்றன. ஆனால் உறுதியான தொகுதி பங்கீடு ஒப்பந்தம் இன்னும் கையெழுத்தாகவில்லை.

இந்நிலையில், தொகுதி உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பே மகாராஷ்டிரா பாஜக கூட்டணிக்குள் மோதல் தலைதூக்கியுள்ளது. பாரமதி மக்களவைத் தொகுதி தேசியவாத காங்கிரஸ் (அஜித்) கட்சிக்கு ஒதுக்கப் பட்டுள்ளதற்கு முன்னாள் அமைச்சரும், சிவசேனா (ஷிண்டே) கட்சியின் மூத்த தலைவருமான விஜய் ஷிவ்தாரே கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

இந்நிலையில், பாரமதியில் சுயேச்சையாக களமிறங்க உள்ளதாக 2 நாட்களுக்கு முன்பு அறிவித்தார். இந்த விவகாரம் பாஜக கூட்டணிக்குள் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து, அவரை சமாதானப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## வினாடி – வினா



1. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற மொத்த வாக்காளர்கள் எத்தனை பேர்?
2. நாடாளுமன்றத் தேர்தலில் முதல்முறை வாக்களிக்கும் (18 19 வயது) வாக்காளர்கள் எத்தனை பேர்?
3. மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிக வயதான நாடாளுமன்ற உறுப்பினர் (MP) பெயர் என்ன?
4. இந்தியாவில் அதிகமான நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட மாநிலம் எது?
5. நாடாளுமன்றத்தில் அதிகமான பெண் பிரதிநிதிகள் பங்கேற்றது எப்போது? எத்தனை பேர்?
6. மிகக் குறுகிய காலம் பிரதமராக இருந்தவரின் பெயர் என்ன?

விடைகள் 12 ஆம் பக்கம்

- **கள்ளப் பணத்தை ஒழிப்பேன்னு வாக்குறுதி!**
- **நல்ல பணத்தை எல்லாம் ஒழிச்சு..**
- **நம்ம நாட்டு மக்களை நடுத்தெருவில் விட்டாச்சு!**
- **மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**

# தேர்தல் 2024

## பாஜக ஆளும் உ.பி.,யில் 6 வயது சிறுமி வன்புணர்வு



பாஜக ஆளும் உத்தரப்பிரதேசத் தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. புதனன்று 6 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் ஒன்றும் நடந்துள்ளது. பரா பங்கி அருகே உள்ள ஒரு கிராமத்தில் தனது வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த 6 வயது சிறுமியை, குடி போதையில் இருந்த பக்கத்து வீட்டில் வசிக்கும் ஆனந்த் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

பெற்றோரின் புகாரின் அடிப்படையில் போலீசார் விசா ரணை மட்டுமே மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகியது. ஆனால், பாலியல் குற்றவாளியான ஆனந்த் கைது செய்யப்பட்டதாக இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

**ஜார்க்கண்டிலும்...**

ஜார்க்கண்ட் மாநிலம் ராம்கர் மாவட்டத்தில் 16 வயது சிறுமியை 3 பேர் கொண்ட கும்பல், பாலியல் வன்கொடுமை செய் யப்பட்ட சம்பவமும் நடந்துள்ளது. சிறுமியின் தாயார் அளித்த புகாரின் பேரில் ஜார்க்கண்ட் அரசு சிறப்பு தனிப்படை அமைத்து குற்றவாளிகளை அதிவிரைவாக கைது செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நேரத்திலும் சிறுமிகள் பாலியல் வன்புணர்வு. நாடு எங்கே போகிறது?

## ஒன்றிய அமைச்சர் பிரகலாத் ஜோஷிக்கு சிக்கல்

### லிங்காயத் துறவிகள் எதிர்ப்பு

கர்நாடகா மாநிலம் தார்வாட் மக்களவைத் தொகுதியில் கடந்த 2009 முதல் எம்பியாக இருக்கிறார் தற்போதைய நிலக்கரி, சுரங்கத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி. இத்தொகுதியில் லிங்காயத்துகள் பெரும்பான்மையாக உள்ள நிலையில், பிராமண சமூ கத்தை சேர்ந்தவரான பிரகலாத் ஜோஷிக்கு பாஜக மீண்டும் வாய்ப்பு வழங்கியுள்ளது சரியானது அல்ல என்றும், அவருக்கு எதிராக லிங்காயத் துறவிகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இது குறித்து லிங்காயத் துறவிகள் கூட்டாக அளித்த பேட்டியில், "தார்வாட் தொகுதியின் பாஜக வேட்பாளர் பிரகலாத் ஜோஷியை மாற்ற வேண்டும். இல்லையென்றால் ஏப்ரல் 2 அன்று தங்களது முடிவை அறிவிப்போம்" என கூறியுள்ளனர். லிங்காயத் சமூகத்தின் வாக்குகளை நம்பியே கர்நாடகாவில் பாஜக ஒவ்வொரு தேர்தலையும் எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில், வேட்பாளரை மாற்றக் கோரும் லிங்காயத் துறவிகளின் அழுத்தம் காரணமாக பாஜகவின் மாநில மற்றும் தேசிய தலைமை கலக்கத்தில் ஆழ்ந்துள்ளது.

## சுதந்திரமான தேர்தலை உறுதி செய்ய வேண்டும்

### மோடி அரசுக்கு ஐ.நா.வலியுறுத்தல்

United Nations

70 வருடம் இந்தியாவை ஆண்ட காங்கிரஸ் கட்சி மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளக் கூடாது என்பதற்காக வருமான வரித்துறை வங்கிக் கணக்கை முடக்கியும், ரூ.1823 கோடி அபராதம் விதித்துள்ளதையும், தில்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது உள்ளிட்டவைகளை சுட்டிக்காட்டி ஐக்கிய நாடுகள் சபை மோடி அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து ஐநா சபை விடுத்துள்ள அறிக்கையில்,"ஒரு நாட்டில் மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று எதிர் பார்க்கிறோம். இந்தியாவில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்" என மோடி அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் நோக்கில் அறிக்கை வெளியிட்டுள்ளது.

## அந்நிய நேரடி முதலீடு அல்ல அதானிக்கு முதலீடு!




அந்நிய முதலீடு தேடி நாடு நாடாக போனவர் பிரதமர் மோடி! ஆனால் உண்மையில் நேரடி அந்நிய முதலீட்டை திரட்டினாரா?

• செப்டம்பர் 2018இல் இந்தியாவுக்கு வந்த அந்நிய நேரடி முதலீடு 27.7 பில்லியன் டாலர்.

• ஜனவரி 2024இல் இது 18.4 பில்லியன் டாலராகச் சரிவு.

இதன் பொருள் என்ன?

1. இந்தியாவின் வளர்ச்சி மீது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை இல்லை.

2. அந்நிய முதலீடு மூலம் உருவாகும் வேலை வாய்ப்புகள் பாதிப்பு.

அந்நிய முதலீடு வந்ததோ இல்லையோ! ஆனால் அதானி அந்நிய நாடுகளில் முதலீடு செய்து தொழில்களைத் துவக்கினார். அதற்கு தேசவுடைமை வங்கியான ஸ்டேட் வங்கி பல்லாயிரம் கோடி கடன் கொடுத்தது! இந்தியப் பொருளாதாரத்தை நாசமாக்கிய

பா.ஜ.க.வை விரட்டியடிப்போம்!

தேசத்தின் பொருளாதாரத்தை மீட்போம்.

## நிர்மலா சீதாராமன் போட்டியிட பணம் இல்லையா? பயமா?



மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு என்னிடம் பணம் இல்லை என்று மத்திய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரி வித்துள்ளார்.

வரும் மக்களவைத் தேர்தலில் போட்டி யிடுவது குறித்து பரிசீலிக்குமாறு எங்களது கட்சி சார்பில் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. நானும் அது குறித்து 10 நாட்கள் வரை யோசித்துப் பார்த்தேன். பின்னர் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்ற எனது முடிவை தெரிவித்தேன்.

என்னிடம் தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு பணம் இல்லை. தமிழகம் அல்லது ஆந்திராவில் போட்டியிட்டால் மதம், ஜாதி போன்றவை வெற்றிக்கான காரணிகளில் பிரதானமானதாக பார்க்கப்படும். அதனால்தான் நான் தேர்தலில் போட்டி யிடவில்லை. எனது முடிவை கட்சியும் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். தற்போது மாநிலங்களவை உறுப்பினராக உள்ள அவரது பதவிக்காலம் 2028ம் ஆண்டு நிறைவடையவுள்ளது.

பணம் இல்லை என்பது உண்மையல்ல. பயம் என்பதே உண்மை.

## இந்தியாவின் வளர்ச்சி உண்மையல்ல, முட்டாளதனம்

### ரகுராம் ராஜன் கருத்து



இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாக கூறப்படுவதில் உண்மை இல்லை என ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ரகுராம் ராஜன் அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்தியப் பொருளாதாரம் வலுவானதாக மாறி வருவதாக கூறப்படும் பரபரப்பு செய்திகளில் உண்மை இல்லை. அதுபோன்றதொரு போலியான பிம்பம் உருவாக்கப்பட்டு பெரிய தவறிழைக்கப்படுகிறது. இந்தியா வலுவான பொருளாதார வளர்ச்சி பெருவதை உண்மையாக்க இன்னும் பல வருட கடின உழைப்பு தேவைப்படுகிறது. முதலில் இந்தியாவின் வளர்ச்சியைஊக்குவிக்க அடிப்படைக் கட்டமைப்பில் உள்ள சிக்கல்கள் சரிசெய்யப்பட வேண்டும்.

குறிப்பாக, கல்வி, தொழிலாளர் திறன் நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். 2024ல் பொறுப்பேற்கும் புதிய அரசு நிலுவையில் உள்ள இதுபோன்ற பிரச்சினைகளை சீர்செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். 2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கு என்ற மோடியின் கூற்று எட்டப்பட வாய்ப்பில்லை. இடைநிற்றல் விகிதம் அதிகரிப்பு மற்றும் உங்கள் குழந்தைகளில் பலருக்கு உயர்கல்வி இல்லை என்ற நிலை இன்னும் உள்ளபோது வளர்ச்சி இலக்கைப் பற்றி பேசுவது முட்டாள்தனம்" என்று கூறினார்.

## 'கற்பனை உலகில் பாஜகவினர்'

### கே.பி.முனுசாமி கிண்டல்



மக்களவைத் தேர்தல் வெற்றி குறித்து பாஜகவினர் கற்பனை உலகில் உள்ளதாக அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி விமர்சித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி குந்தாரப்பள்ளியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

மக்களவைத் தேர்தலில் பாஜகவினர் 350 முதல் 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்ற மாய தோற்றத்தை உருவாக்கி மக்களிடையே வாக்குகளைப் பெற முயற்சி செய்கின்றனர்.

இதேபோல, அண்ணாமலை கோவையில் வெற்றி பெறுவது உறுதி, எத்தனை வாக்குகள் வித்தியாசம் என்பதை தான் பார்க்க வேண்டும் என்றெல்லாம் பேசி வருகின்றனர். அவர்களை கற்பனை உலகத்தில் மிதந்து வருகின்றனர். மோடி அலை இல்லை என்பது தேர்தல் முடிவுக்கு பின்னர் தெரியும்.

இவ்வாறு கிண்டலாக கே.பி.முனுசாமி கூறியுள்ளார்.

## மக்களவை எம்.பி.க்கள் 225 பேர் மீது குற்ற வழக்குகள்

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) என்ற அமைப்பு தற்போதைய மக்களவை எம்.பி.க்களின் வேட்பு மனுக்களை ஆய்வு செய்ததில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம்:

தற்போதைய மக்களவை எம்.பி.க்கள் 514 பேரில் 225 பேர்மீது குற்ற வழக்குகள் உள்ளன. இது 44 சதவீதம் ஆகும். இவர்களில் 29 % பேர் மீது கொலை,கொலை முயற்சி, இனக் கலவரத்தை தூண்டியது, கடத்தல் என கடுமையான குற்ற வழக்குகள் உள்ளன. இவர்களில் 9 பேர் மீது கொலை குற்றச்சாட்டுகள் உள்ளன. 'குற்ற வழக்குகள் உள்ள எம்.பி.க்களில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் உ.பி., மகாராஷ்டிரா, பிஹார், ஆந்திரா, தெலங்கானா, இமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். எம்.பி.க்களில் பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பலர் கோடீஸ்வரர்களாக உள்ளனர்.சிலர் பல நூறு கோடி சொத்து மதிப்புடையவர்களாக உள்ளனர்.காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நகுல்நாத், டி.கே.சுரேஷ், சுயேட்சை எம்.பி. கானுமுரு ரகு ராம கிருஷ்ணராஜு' ஆகியோருக்கு பல நூறு கோடி சொத்துகள் உள்ளன. நாடாளுமன்றம் கிரிமினல்களின் கூடாரமா?

**▸ நீட் தேர்வு நிலையானதா மாறிடுச்சு!**

**▸ ஏழை மாணவர்கள் நிலையோ நிர்க்கதி ஆயிடுச்சு!**

**▸ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**



# தேர்தல் 2024

## திண்டுக்கல்லில் வாக்கு சேகரிப்பு



இந்தியா கூட்டணி சார்பில் திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் சச்சிதானந்தம் அவர்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் ஆவின் பாலகம் அருகில் துவக்கப்பட்டு, நாகல் நகர் பேருந்து நிலையம் அருகில் பிரச்சார கூட்டம் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எ.பி.மணிகண்டன், நகரச் செயலாளர் ஆகியோர் பங்கேற்றார்கள்.

## இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்



**ஸ்ரீபெரும்புதூர்:** இந்தியா கூட்டணியின் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் டி.ஆர். பாலு, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் அவர்களிடம் தனது வேட்பு மனுவை 25.03.2024 அன்று தாக்கல் செய்தார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமை கட்சி தோழர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ. ராஜ்குமார், முன்னாள் மாவட்ட செயலாளர் எல். மேகநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் வெ. வீராசாமி, விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பி.எஸ். எல்லப்பன், மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவாராதாஸ், இன்பராஜ், வீராகவன் மற்றும் கட்சியின் தொகுதி செயலாளர்கள் கிளை தோழர்கள் பங்கேற்றனர்.

**திண்டுக்கல்:** இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கட்சியின் வேட்பாளர் சச்சிதானந்தம் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் உள்ளிட்ட தோழர்கள் உடனிருந்தனர்.

## வினாடி - வினா விடைகள்

1. 96.88 கோடி பேர்
2. 1.84 கோடி பேர்
3. ராம்சுந்தர் தாஸ் 88 வயது (2009 ஹாஜிப்பூர் தொகுதி)
4. உத்தரப்பிரதேசம் – 80 தொகுதிகள்
5. 16 வது மக்களவையில் (2014 –2019) 66 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள்
6. குல்சாரி லால் நந்தா, இரண்டு முறை தலா 13 நாட்கள்



## நெல்லை நாடாளுமன்ற வேட்பாளருக்கு சிபிஐ அலுவலகத்தில் வரவேற்பு

நெல்லை பாராளுமன்ற, இந்திய கூட்டணியின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் சி. ராபர்ட் புரூஸ், நெல்லை மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்தார். மாவட்ட செயலாளர் ஆர். சடையப்பன் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது. மாவட்ட துணைச் செயலாளர் ஏ. சேதுராமலிங்கம், மாவட்ட ஏ ஐ டி யூ சி உபதலைவர் ஆர்.ரெங்கன், நெல்லை மண்டல துணைச் செயலாளர் பொ. கிருஷ்ணன், அலுவலக செயலாளர் ஏ. முத்துகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் நாடாளுமன்ற தேர்தல் பிரச்சார கூட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் ஆலோசனை கூட்டம் கட்சியின் வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் வி. இ. ராஜீவ் காந்தி தலைமையில் செங்குன்றத்தில் நடைபெற்றது. இதில் புழல் ஒன்றிய செயலாளர் ஆர். சீனிவாசன், சோழவரம் ஒன்றிய பொருளாளர் கே. குமரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் தேர்தல் பொறுப்பாளர் என். எஸ். பிரதாப் சந்திரன் நடைபெற உள்ள தேர்தல் பணிகளின் முக்கியத்துவம் குறித்தும், மோடி தலைமையிலான ஆட்சி தோற்கடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். இதில், முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் கே.போஸ், வில்லிவாக்கம் ஒன்றிய துணை செயலாளர் வெங்கடேச பெருமாள், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் எம். பி. குமார், எம்ஜிஆர் நகர் கிளைச் செயலாளர் ஆர். பஞ்சநாதன், அனைத்திந்திய இளைஞர் பெரு மன்றத்தின் மாவட்ட குழு உறுப்பினர் வி.பிரபாகரன், செங்குன்றம் சிறு கடை வியாபாரி சங்கத்தின் தலைவர் எஸ். சத்தார், மற்றும் லிங்கபாண்டி, இ பச்சையப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

## திருவள்ளூர் நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுக கூட்டம்

திருவள்ளூர் நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுக கூட்டம் மாதவரத்தில் நடைபெற்றது. இதில் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி, மாதவரம் நகர செயலாளர் அஜய் கோஷ், மாதவரம் தேர்தல் பொறுப்பாளர் என்.எஸ்.பிரதாப சந்திரன், கே.குமரேசன், கே.போஸ், வி.இ.ராஜீவ் காந்தி, எம்.பி.குமார், சி.ஜெ.ஆனந்தன், முனுசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மணப்பாறை நகர தேர்தல் நிதியளிப்பு



மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நகரகுழு சார்பில் நகர செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமையில் நடைபெற்ற சிறப்பு பேரவையில் மாநில கிளர்ச்சி பேச்சாளர் குழு நிர்வாகி இந்திரஜித் அவர்கள் ராஜ் குமாரிடம் முதல் தவணையாக தேர்தல் நிதி வழங்கபட்டது. மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி, மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, ராகமத்துனிஷா, நகர துணைச் செயலாளர் மரியராஜ் உட்பட நிர்வாகிகள் உடன் இருந்ததனர்.

குமரி வேட்பாளர்

## விஜய்வசந்த்துக்கு சிபிஐ வாழ்த்து



இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் வ.விஜய்வசந்த் அவர்கள்குமரிமாவட்ட இந்தியகம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்தார். அவருக்கு மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் வாழ்த்து தெரிவித்தார்.

## கோயில் மனையில் குடியிருப்போர் சங்கம் தேர்தல் நிதி வழங்கினர்




தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களிடம் தேர்தல் நிதி அளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாநிலத் தலைவர் வி.ஏ.பாலசுப்பிரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டி.சசிகுமார், எஸ்.கண்ணன், வடசென்னை மாவட்ட தலைவர் டி.காமராஜ், செயலாளர் செந்தில், செல்வம், செல்வராசன், திருவள்ளூர் மாவட்ட தலைவர் கே.வி.ஆனந்தன், தமிழக இந்து சமய திருக்கோயில்களின் வாடகைதாரர்கள் சங்க பொருளாளர் கோவிந்தராஜ், நுங்கம்பாக்கம் செயலாளர் பிரகதீஸ்வரன், மந்தைவெளி சுந்தரவிநாயகர் கோயில் வாழ்வோர் ரவி, ஜெயக்குமார் கலந்துகொண்டனர்.

## ஓய்வூதியர்கள் தேர்தல் நிதி



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தென் சென்னை மாவட்டம் அரசு ஓய்வூதியர்கள் கட்சி கிளை சார்பில் நாடாளுமன்ற தேர்தல் நிதி வழங்கும் நிகழ்வு 28.3.2024 அன்று பாலன் இல்லத்தில் நடைபெற்றது. கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி அவர்களிடம் ஆர்.கிருஷ்ணமூர்த்தி நிதியை வழங்கினார்.

- மீத்தேன், ஹைட்ரோ கார்பனை மீறிக் கொண்டு வந்தாச்சு!
- போராடுன விவசாயியை மூலையிலே முடக்கியாச்சு!
- மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!

# தேர்தல் 2024

# சிபிஐ தேர்தல் பிரச்சார கூட்டம்

## இரா.முத்தரசன் பங்கேற்பு



திருச்சி புறநகர் மாவட்டம் பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட துறையூர் சட்டமன்றத்தில் உள்ள பாலக்கரை கடை வீதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் தலைமை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் சேகர், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் மாவட்ட செயலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திமுக வடக்கு மாவட்ட செயலாளர் முசிறி சட்டமன்ற உறுப்பினருமான தியாகராஜன், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மர் ராஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் துரை சங்கர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் செல்வராஜ், கிளர்ச்சி பேச்சாளர் குழு உறுப்பினர் இந்திரஜித் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் அருண் நேருக்கு வாக்கு சேகரித்து சிறப்புரை ஆற்றினார். இதில் புறநகர் மாவட்டத் துணைச் செயலாளர் பழனிச்சாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன், தொட்டியம் ஒன்றிய செயலாளர் சதீஷ், தாப்பேட்டை ஒன்றிய செயலாளர் சரத்குமார், முசிறி ஒன்றிய செயலாளர் சண்முகம், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் ரமேஷ் உட்பட ஒன்றிய நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக லெனின் காந்தி, தங்கவேல், சுமதி கலைகுழு தேர்தல் பிரச்சார பாடல்களில் வாக்கு சேகரித்தனர்.

**பெரம்பலூர்:** பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக. வேட்பாளர் கே.என்.அருண்நேருவுக்கு மணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட நம்பர் ஒன் டோல்



கேட் பகுதியில் வாக்களர்களிடம் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வாக்கு சேகரித்தார். உடன் கிளர்ச்சி பேச்சளர் குழு உறுப்பினர் இந்திரஜித், தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் செல்வராஜ், புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன், ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உட்பட கட்சி மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 157. ஏற்றதை ஆற்றுவதறிவு

**ஏற்ற தறியினும் எண்ணி இடத்தாஅல்**
**ஆற்றலே ஆகும் அறிவு.**

தகுதியானவற்றை அறிந்திருந்தாலும் இடமறிந்து செயலாற்ற வேண்டும். இல்லையானால் அறிவு புறக்கணிக்கப்படும். பயன்படாது.

**ஏற்றதறிந் தெண்ணி இடனறிந்தும் என்னாகும்**
**காலம் கருதாதக் கால்.**

செய்ய வேண்டிய செயலை, தகுதியான இடமறிந்து செய்தாலும், காலம் அறிந்து உரிய நேரத்தில் சொல்லாவிட்டால் பயன்படாது.

# சர்வாதிகார பாஜக ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அரியலூர் ஒன்றியக் குழு முடிவு



அரியலூர் கட்சி அலுவலகத்தில் கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் அடித்தட்டு மக்களின் வயிற்றில் அடித்து, துன்புறுத்தி, கார்ப்பரேட் பெரும் முதலாளிகளின் வயிற்றில் பால் வளர்க்கும் சர்வாதிகார ஆட்சியை நடத்திவரும் பாஜக மோடி ஆட்சியை அகற்றிட, சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு பெற்ற விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் வேட்பாளர் தொல். திருமாவளவன் அவர்களை வெற்றி பெறச் செய்திட மக்களிடையே தீவிர பிரச்சாரம் கொண்டு போக வேண்டும் என மாவட்டக் குழு உறுப்பினர் த.தண்டபாணி பேசும்போது குறிப்பிட்டார்.

வரும் ஏப்ரல் 10 அரியலூர் ஒன்றியத்திலும் ஏப்ரல் 11 செந்துறை ஒன்றியத்திலும் வேன் மூலம் கிராமங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்வது, ஏப்ரல் 15 அன்று அரியலூர் நகரத்தில் தெருமுனைப் பிரச்சாரம் செய்வது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

# தேர்தல் நிதி வசூல்



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் கடைவீதியில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்றத் தேர்தல் நிதி வசூல், ஒன்றியச் செயலாளர் ஏ.நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.மீரா மொய்தீன், மாவட்டத் துணைச் செயலாளர் கே.ஆர். தர்மராஜன், நகர குழு உறுப்பினர்கள் கே.டி.தமிழ்ச்செல்வன், கே. சண்முகம், விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலாளர் எம்.ராஜேந்திரன் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

# தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை சீரழித்த மோடி அரசை வீழ்த்துவோம்!

## உடலுழைப்பு தொழிலாளர் சம்மேளனம் முடிவு



தமிழ்நாடு ஏஐடியூசி உடல் உழைப்பு தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில நிர்வாக குழு கூட்டம் தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் மாநிலத் தலைவர் வி.ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் ஆர் . தில்லைவனம் நடைபெற்ற பணிகள் குறித்து பேசினார். தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர்கள் விரோத, மக்கள் விரோத மோடி அரசை வீழ்த்த வேண்டிய அவசியம் குறித்து உரையாற்றினார். கூட்டத்தில் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், உடல் உழைப்பு சங்க மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் தி.கோவிந்தராஜன், வெ.சேவையா, எம் .சந்திரன், பி.தனசேகர், எஸ்.ராமகிருஷ்ணன், ஆர்.கோபிராஜ், உ.அரசப்பன், திருச்சி ஏஐடியூசி மாவட்ட தலைவர் நடராஜ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

மோடியின் பாஜக ஆட்சியில் உடல் உழைப்பு வாரியம், கட்டுமானம் உள்ளிட்டு அனைத்து வாரியங்களையும் ஒருங்கிணைத்து மத்திய சட்டம் கொண்டுவர பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் மோடி அரசு கண்டு கொள்ளவில்லை. ஒருங்கிணைந்த மத்திய சட்டம் கொண்டுவரப்படாததால் இவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக அன்றாடம் உழைக்கின்ற ஏழை எளிய மக்களை கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் விலைவாசி உயர்வு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் சீரழித்துள்ளது மோடி அரசு. பாதுகாக்க தவறிய மோடி அரசை, நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடிப்போம், இந்தியா கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம் என்று உடல் உழைப்பு சம்மேளன மாநில நிர்வாக குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# அதிமுக, பாஜக கள்ளக்கூட்டணி

## வேலூரில் இரா.முத்தரசன் சாடல்



வேலூரில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கதிர் ஆனந்தை ஆதரித்துஇந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் சாய்நாதபுரம்,விருபாட்சிபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் வாக்குகளை சேகரித்தார். அவருடன் மாவட்ட செயலாளர் லதா மற்றும் நிர்வாகி மணி உள்ளிட்ட பல தோழர்கள் கலந்துகொண்டனர் .

அப்போது செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்த நாடாளுமன்ற தேர்தல் இரண்டாவது சுதந்திர போராட்டம் போன்றது. பாசிசம் தோற்கடிக்கப்பட்டு இந்தியா கூட்டணி வெற்றி பெறும். அதிமுகவின் எடப்பாடி பழனிசாமி எங்களுக்கும் பாஜகவுக்கு தொடர்பில்லை என்று சொல்கிறார். ஆனால் நாகை மீனவர் பல்கலைகழகத்திற்கு ஜெயலலிதா பெயரை சூட்ட திமுக, அதிமுக ஆட்சிகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆளுநருக்கு அனுப்பி, அதனை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பி விட்டார். ஆனால் குடியரசு தலைவர் மற்றும் ஒன்றிய அரசு ஜெயலலிதா பெயரை சூட்ட முடியாது என பதிலளித்துள்ளது. எடப்பாடி பழனிசாமி ஜெயலலிதா பெயரை மீனவர் பல்கலைகழகத்திற்கு வைக்க முடியாது என்பதை கண்டிக்கவும் இல்லை. எதிர்ப்பும் இல்லை. தமிழகத்தில் ஒன்று கள்ள கூட்டணி, மற்றொன்று நள்ளிரவு கூட்டணி. இவர்களுக்கு எதிராக தமிழகம் புதுச்சேரியையும் சேர்த்து மக்கள் இந்தியா கூட்டணிக்கு 40 தொகுதிகளிலும் வெற்றியை தருவார்கள் என்று கூறினார்.



- சேது சமுத்திரத்தை கிடப்பில் போட்டாச்சு!
- ஸ்டெர்லைட் ஆலையிடம் லஞ்சம் வாங்கியாச்சு!
- மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!

# மோடியின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையம்

**இரா.முத்தரசன் குற்றச்சாட்டு**




எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்காமல் சின்னத்தை முடக்குவதன் மூலம் மோடியின் கைப்பாவையாக தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என சிதம்பரம் தொகுதி வேட்பாளர் திருமாவளவனை ஆதரித்து ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் பேசினார்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் இந்தியா கூட்டணி சார்பில் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனை ஆதரித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அரியலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கதிரவளவன் வரவேற்றுப் பேசினார். சிபிஐ மாவட்ட செயலாளர் ராமநாதன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட தலைவர் சங்கர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இளங்கோவன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நகர மன்ற தலைவர் சுமதி சிவக்குமார், மதிமுக புகழேந்தி உட்பட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சிறப்புரையாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் பேசியதாவது:

கொள்கைக்காக போராடுகின்ற இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். சிதம்பரம் தொகுதியில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்து தெரியாமல் இருக்கிறோம். இதேபோன்று பல கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யவில்லை. தேர்தல் ஆணையம் எல்லோருக்கும் சம வாய்ப்பை அளிக்க வேண்டும். ஆனால் தேர்தல் ஆணையம் மோடியின் கைப்பாவையாக செயல்படுகிறது. எங்களுக்கு பானை சின்னம் ஒதுக்கினாலும் சரி, ஒதுக்காவிட்டாலும் சரி திருமாவளவன் தான் இங்கு வெற்றி பெறுவார். சின்னத்தை முடக்குவதன் மூலமாக வெற்றி பெறலாம் என்று நீங்கள் கனவு காண்பீர்கள். ஆனால் தோற்றுப் போவீர்கள். இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும் என்றார். நிறைவாக ஜெயங்கொண்டம் தொகுதி செயலாளர் இலக்கிய தாசன் நன்றி கூறினார்.

# இலங்கையில் சிறைப்பட்டுள்ள மீனவர்களை ஒன்றிய அரசு தலையிட்டு மீட்க வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்**

இலங்கையில் சிறைப்பட்டுள்ள மீனவர்களை ஒன்றிய அரசு தலையிட்டு மீட்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தி வெளியிட்டுள்ள வருமாறு.

தமிழ்நாட்டின் மீனவர்கள், கடலில் மீன் பிடிக்க செல்லும் போது இலங்கை கடற்படையும். கடல் கொள்ளையர்களும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். மீனவர்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என உறுதியளித்த பாஜகவின் பத்தாண்டு காலமும் மீனவர்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை. அண்மையில் கடலில் மீன் பிடிக்க சென்ற ராமநாதபுரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களையும், புதுச்சேரி, காரைக்கால் பகுதி மீனவர்களையும் இலங்கை கடற்படை கைது செய்து, அவர்களது படகு உள்ளிட்ட உடைமைகளை பறிமுதல் செய்துள்ளது. இலங்கை ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் ராமேஸ்வரம் அந்தோணி முத்துவுக்கு ஓராண்டு சிறை தண்டனையும், விசைப்படகு ஓட்டுநர்கள் அந்தோணி லோபஸ், முருகானந்தம் ஆகிய இருவருக்கும் தலா ஆறுமாத சிறை தண்டனையும் விதித்து யாழ்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகு நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க தவறிய ஒன்றிய அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கண்டனம் தெரிவிப்பதுடன் இலங்கையில் சிறைப்பட்டுள்ள மீனவர்களை விடுவித்து நாடு திரும்ப அழைத்து வர வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சின்னம் ஒதுக்கீடு செய்வதில் தேர்தல் ஆணையத்தின் பாரபட்சம் நியாயமற்றது

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**

சின்னம் ஒதுக்கீடு செய்வதில் – தேர்தல் ஆணையத்தின் பாரபட்சம் நியாயமற்றது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

நடைபெறும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் போட்டியிடும் மதிமுக உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் ஏற்கனவே நடந்து முடிந்த தேர்தலில் ஒதுக்கீடு பெற்ற சின்னங்களை மீண்டும் ஒதுக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்தில் முறையிட்டிருந்தன. இந்த முறையீடுகள் மீது தேர்தல் ஆணையம், சார்பற்ற நடுநிலையோடு நடந்து கொள்ளவில்லை என்பது பெரும் கவலை அளிக்கிறது.

இண்டியா கூட்டணியில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரித்து விட்டு, பாஜக ஆதரவுக் கட்சிகளின் கோரிக்கைகளை தேர்தல் ஆணையம் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் இந்த நியாயமற்ற நடைமுறைக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையான எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ரூ. 1.8 கோடி சொத்து ஏழ்மையாம்!

“என்னிடம் பணம் இல்லாததால் நான் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை.”

இது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சொன்னது.

நாட்டின் நிதியமைச்சரோ தன்னிடம் காசு இல்லை என்கிறார். ஆனால் 2022ல் மாநிலங்களவைத் தேர்தலில் அவர் சமர்ப்பித்த தரவுகளில் தனக்கு ரூ.1.8 கோடி சொத்து உள்ளதாக தெரிவித்து உள்ளார். 1.8 கோடி சொத்து என்பதே ஏழ்மை எனில், மாதம் வெறும் ரூ.5000 அல்லது ரூ. 10000க்கும் குறைவாக வருமானம் ஈட்டும் கோடிக்கணக்கான இந்தியர்களின் கதி என்ன என்பதை நிதி அமைச்சர் யோசிப்பாரா?

# வணிகர்கள் எடுத்துச் செல்லும் பணம் ரூ.2 லட்சமாக உயர்த்த வேண்டும்

**தேர்தல் ஆணையத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை**



வணிகர்கள் எடுத்துச் செல்லும் பணம் ரூ.2 லட்சமாக உயர்த்த வேண்டும் என தேர்தல் ஆணையத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி கோரிக்கை விவரம் வருமாறு.

தேர்தல் ஆணையம் மாதிரி நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள பகுதிகளில் ரொக்கப் பணம் ரூ.50 ஆயிரம் மட்டுமே வைத்துக் கொள்ளலாம் என்று வரம்பு நிர்ணயித்துள்ளது. இது வணிகர்களையும், பொது மக்களையும் கடுமையாக பாதிக்கிறது. ஏப்ரல் 19 வரை வணிக நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதாக வணிகர்கள் புகார் தெரிவிக்கிறார்கள். திருமணம் உள்ளிட்ட சில சமூக காரியங்களும் தடைபடுவதாகவும் தகவல் வருகின்றன. வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்டு வரும் இடையூறுகளையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்கு கொண்டு சென்று, வழிப்பயணத்தில் குறைந்த பட்சம் இரண்டு லட்சம் ரூபாய் எடுத்துச் செல்லும் வகையில் மாதிரி நடத்தை விதியில் திருத்தம் செய்து அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# விவசாயிகளுக்கு துரோகம் இழைத்த அதிமுக, பாஜக கூட்டணியை தோற்கடிப்போம்

**விவசாயிகள் சங்க மாநிலக் குழு தீர்மானம்**



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில குழு கூட்டம் தஞ்சாவூர் கட்சி அலுவலகத்தில் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளர் த.இந்திரஜித் தலைமையில் நடைபெற்றது. மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி நடைபெற்ற பணிகள் குறித்தும், நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் விவசாயிகள் தொழிலாளர்கள் விரோத, மோடி அரசையும், கருப்பு சட்டங்களுக்கு துணைப் போன அதிமுக கூட்டணி கட்சிகளையும் தோற்கடிக்க வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தி பேசினார்.

கூட்டத்தில் தேசிய குழு உறுப்பினர்கள் அ.பன்னீர்செல்வம், மு.மாதவன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, ஆர் .பழனிச்சாமி, எஸ்.வேலாயுதம், ஆர்.கருணாநிதி, எம்.முத்துசாமி, அயிலை சிவசூரியன், இ.பி.காசி விஸ்வநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக தஞ்சை மாவட்ட செயலாளர் சோ. பாஸ்கர் அனைவரையும் வரவேற்றார். முடிவில் தஞ்சை மாவட்ட தலைவர் ஆர். இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

மூன்று வேளாண் சட்டங்களை திரும்பபெற வேண்டும், விவசாயிகளுக்கு எம்.எஸ்.சாமிநாதன் குழு பரிந்துரைப்படி கட்டுப்படியான விலை நிர்ணயிக்க வேண்டும், மின்சார திருத்த மசோதாவை கைவிட வேண்டும், நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் விவசாயிகள் விரோத அதிமுக, பாஜக கட்சிகளை தோற்கடிப்பது எனவும், இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரிப்பது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**➤ மேகதாது அணை கட்ட கடைக்கண் காட்டியாச்சு!**
**➤ காவிரி டெல்டாவின் கழுத்தை நெரிச்சாச்சு!**
**➤ மோடிக்கு ஓட்டு ஒரு கேடா!**

# திருப்பூர் தொழில் நெருக்கடிக்குக் காரணம் பாஜகவே!

## கே.சுப்பராயன் எம்.பி. பேச்சு



திருப்பூர் மக்களவைத் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுகிற கே. சுப்பராயன், வேலம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானம் மற்றும் டி மைதானம் ஆகிய இடங்களில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசும்போது, திருப்பூரில் தொழில் நெருக்கடிக்கு காரணம் பா.ஜ.க. கொள்கைதான். மாற்றுக் கொள்கை அரியணை ஏற வேண்டும் என்று பேசினார்.

“திருப்பூர் நகரம் தற்போது உலகம் முழுவதிலும், ஐந்து கண்டங்களிலும், நாடுகளிலும் குறிப்பிடப்படுகிற அளவிற்கு ஒரு கீர்த்தியும், பெருமையும் பெற்று இருக்கிறது என்றால் அதற்கு காரணம் பனியன் தொழில் தான்.

திருப்பூரின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மிக முக்கியமான காரணம் பனியன் தொழில்தான்.

அந்த நிலை தற்போது நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது.

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த காலத்தில் எம்.ஆர்.டி.பி. சட்டம் என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது. அதாவது ஏகபோக முதலாளிகள் தடைச் சட்டம். அந்த சட்டத்தின் படி எம்.எஸ்.எம்.இ. (சிறு குறு நடுத்தர தொழில்) சம்பந்தப்பட்ட எந்த தொழிலிலும் ஏகபோக முதலாளிகள் ஈடுபடக்கூடாது என்ற தடுத்திருந்தார் நேரு.

அதேபோல பிற்படுத்தப்பட்ட பகுதி என்று சில பகுதிகள் அறிவிக்கப்பட்டு, அந்தப் பகுதிகளுக்கு பல்வேறு சலுகைகளை கொடுத்து, நாடு முழுவதும் சிறு குறு நடுத்தர தொழில் வளர்வதற்கு உரிய கொள்கையை வகுத்தவர் ஜவஹர்லால் நேரு.

அவரது காலத்தில் தான், சிறு குறு நடுத்தர தொழில்கள் வளர்ந்தன. அதனால் நீங்கள் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள், வேலைவாய்ப்பில் 92% சதவீதம் வேலைவாய்ப்பை (சிறு குறு நடுத்தர தொழில்) தான் கொடுக்கிறது. இது அரசு வழங்கி உள்ள புள்ளி விவரம். வெறும் 7% சதம் வேலை வாய்ப்பை மட்டும் தான் செபி இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகிற கனரக தொழில்கள் வழங்குகின்றன.

தற்போது சிறு குறு நடுத்தர தொழில்கள் வரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. திருப்பூரில் அதானி கம்பெனி தொடங்குகிறார். கார்ப்பரேட் நிறுவனங்கள் தொழிற்சாலைகளை துவக்குகிறார்கள். ஏனென்றால், ஜவஹர்லால் நேரு காலத்தில் இருந்த எம்.ஆர்.டி.பி. சட்டம் நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளது. செயல் இழக்க செய்யப்பட்டு விட்டது.

தற்போதய ஒன்றிய அரசின் கொள்கைகள் நம்முடைய தொழிலை பாதிக்கிறது. நம்முடைய தொழிலை பாதிக்கிற கொள்கை மாற வேண்டுமானால், அதற்கு எதிரான கருத்தோட்டம் கொண்டவர்கள் தான் அதிகாரத்திற்கு வர வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் இந்தியா கூட்டணி அதை முன் வைத்து இந்த தேர்தலில் போட்டியிடுகிறது. எனவே இந்தியா கூட்டணியை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்று பேசினார்.

அவருடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட செயலாளர் டி.கே.டி. நாகராஜ், மேயர் தினேஷ்குமார், துணை மேயர் எம்.கே.எம். பாலசுப்பிரமணியம், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ் ரவிச்சந்திரன் மற்றும் பி.ஆர். நடராஜன், மாமன்ற உறுப்பினர் எஸ்.செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இந்த வார கார்டூன்











# "மிரட்ட நினைத்தால் ஏமாந்து போவீர்கள் மோடி" – மு.க.ஸ்டாலின்

''டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களை கைது செய்ததின் மூலம் 'இந்தியா' கூட்டணித் தலைவர்களை மிரட்ட நினைத்தால் பிரதமர் மோடி ஏமாந்து போவார்'' என்று புதுடெல்லியில் 31.3.2024 அன்று நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்; முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உரையை நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா படித்தார். அதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்த எச்சரிக்கை வருமாறு.

'இந்தியா' என்ற பெயரே அவர்களுக்கு கசப்பானதாக மாறியது. இந்தியா கூட்டணித் தலைவர்கள் அனைவரையும் ஏதோ இந்த நாட்டின் எதிரிகளைப் போல நடத்தத் தொடங்கியது பாஜக தலைமை. பாஜக அல்லாத மாநிலங்களை ஆளும் அரசுகளை, மிகமோசமாக நடத்தினார்கள். ஆட்சிகளைக் கவிழ்ப்பது, கூட்டணிகளை உடைப்பது, எம்.எல்.ஏ.க்களை இழுப்பது என அனைத்து இழிவான செயல்களையும் செய்தார்கள்.

## 'இந்தியா' கூட்டணியை குலைத்து விட முடியாது!

அதன் பிறகு, தனது ஏவல் படைகளான சிபிஐ, வருமான வரித்துறை, அமலாக் கத்துறை ஆகியவற்றைப் பயன்படுத்தி மிரட்டுகிறார்கள். இதில் மிரண்டு பாஜகவில் ஐக்கியம் ஆகிறவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வழக்குகளே திரும்பப் பெறப்படும். ஆனால் பாஜகவின் ஆணவங்களுக்கு அடங்காதவர்களாக இருந்தால் அவர்களை கைது செய்து சிறையில் அடைப்பார்கள். இது இந்தியாவில் அறிவிக்கப்படாத அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டதைப் போல இருக்கிறது.

கைதுகள், அரட்டல் மிரட்டல்கள் அனைத்தும் 'இந்தியா' கூட்டணியை வலிமையாக ஆக்கியதே தவிர பலவீனப்படுத்த வில்லை. தாக்குதல் அதிகமாக அதிகமாக கூட்டணியும், கூட்டணித் தலைவர்களும் வலிமை அடைகிறார்கள். இதைத்தான் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பார்க்கிறோம்.

## தோல்வியை நோக்கி பா.ஜ.க. வேகமாக பயணிக்கிறது!



பாஜக சில மாதங்களுக்கு முன்பு வரை வெற்றி பெற்றுவிடுவோம் என்று கருதியது. ஆனால் நாளுக்கு நாள் தோல்வியை நோக்கி வேகமாக பயணித்து வருகிறது. குடியுரிமை திருத்தச் சட்டம், பொது சிவில் சட்டம், ராமர் கோவில் என்று அடுக்கடுக்காக தனது அஜெண்டாவை பாஜக அவிழ்த்துவிடக் காரணம், இதில் ஏதாவது ஒன்றாவது தன்னைக் காப்பாற்றாதா என்ற ஆசை தான். இவை எதுவும் பாஜகவுக்கு கை கொடுக்கவில்லை. அதனால் தான் இந்தியா கூட்டணித் தலைவர்களைக் குறி வைத்தார்கள்.

## மிகப்பெரிய அதிர்ச்சியளிக்கிறது!

அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள், தேர்தல் சுற்றுப்பயணம் செய்து பாஜகவுக்கு எதிராக பிரச்சாரம் செய்வதை தடுக்கும் முயற்சியாகவே அவரைக் கைது செய்துள்ளார் பிரதமர் நரேந்திரமோடி. ஆனால், அரவிந்த் கெஜ்ரிவால் பரப்புரை ஏற்படுத்தி இருக்க வேண்டிய வரவேற்பை விட அவரைக் கைது செய்தன் மூலமாக கிடைத்த அரசியல் விழிப்புணர்வு என்பது மிகமிக அதிகம்.

சரிந்துகொண்டிருந்த மோடியின் செல்வாக்கை கெஜ்ரிவால் கைது நடவடிக்கை இன்னும் அதிகமாகச் சரித்து விட்டது என்றே சொல்ல வேண்டும். அருமை நண்பர் கெஜ்ரிவால் அவர்கள், சிறைக்குள் இருந்து ஆட்சியை மட்டும் நடத்தவில்லை, இந்தியா கூட்டணியின் எழுச்சிக்கும் தூண்டுதலாக அமைந்து விட்டார்.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்வதன் மூலமாக 'இந்தியா' கூட்டணித் தலைவர்களை மிரட்டிப் பார்க்க நினைத்தால், பிரதமர் நரேந்திர மோடி ஏமாந்து போவார். நாடு முழுவதும் நடக்கும் அனைத்து அசைவுகளையும் மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு தான் இருக்கிறாரகள். அடக்குமுறை மூலமாக யாரும் வென்றதாக வரலாறும் இல்லை. ஆணவக்காரர்களின் ஆட்டத்தை மக்கள் அனுமதித்ததும் இல்லை.

## ஆர்ப்பாட்டத்தை முதலில் அறிவித்த கட்சி தி.மு.க.!

தலைநகர் டெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் துடிப்புடன் பணியாற்றி வரும் ஆம் ஆத்மி தொண்டர்கள் இதன் மூலமாக சோர்வடைந்து விட மாட்டார்கள். பாஜகவை வீழ்த்தியாக வேண்டிய அவர்களது உறுதிக்காரணங்கள் அதிகமாகி வருவதை உணர்வார்கள்.

'இந்தியா' கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் உறுதியுடன் தங்கள் போராட்டத்தை தொடர வேண்டும். மோடி ஆட்சி மீண்டும் வந்தால், இப்போது இருக்கும் இந்தியாவின் ஜனநாயக அரசியலமைப்புச் சட்டப்பண்புகள் வேரோடு சாய்க்கப்படும் என்பதை பரப்புரை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். 'இந்தியா' கூட்டணியின் ஒற்றுமையால் மட்டுமே மோடியை வீழ்த்த முடியும் என்பதை மறந்து விட வேண்டாம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




**➤ சிறு தொழிலை சிதைத்தாச்சு! குறுந்தொழிலை குதறியாச்சு!**
**➤ கட்டி அணைச்சு கார்ப்பரேட்டுகளின் காலடியில் விழுந்தாச்சு!**
**➤ மோடியே ஓட்டு ஒரு கேடா!**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.